REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜுலை 25 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

1932 - 2022

வரு. 90 இல. 173 | Monday 25,July, 2022 | 12 பக்கங்கள் | 40/-

புதிய உருமாற்றத்துடன் கொவிட் பரவல்;


## முகக்கவசம் கட்டாயம் GMOA கடும் வலியுறுத்து



கொவிட்19 புதிய மாற்றத்துடன் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில், முகக்கவசம் அணிவது தொடர்பில் சுகாதார அமைச்சு முன்னைய தீர்மானத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. குறைந்த பட்சம் கொரோனா 04

கல்வி, கடற்றொழில், சுற்றுலா, விவசாய, பொதுச்சேவைகளுக்கு முன்னுரிமை;

## விநியோகத்தை உறுதிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் பணிப்புரை



நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பல்வேறு துறைகளுக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பான விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மேலும், பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள 04

## இந்திய ஜனாதிபதியாக திரௌபதி இன்று பதவியேற்பு

பிரதமர் மோடி உட்பட பலரும் வாழ்த்து

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது




இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக வெற்றிபெற்றுள்ள திரௌபதி முர்மு இன்று (25) சுபவேளையில் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளராக போட்டியிட்ட திரௌபதி முர்மு வெற்றி பெற்றார். இவரை நேரில் சந்தித்து பிரதமர் நரேந்திர மோடி 04

வாரத்தில் 03 தினங்கள் இடம்பெறும் வகையில்

## இன்று முதல் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பமாகின்றன

முதலாம் தவணை செப். 07 வரை நீடிப்பு



எரிபொருள் தட்டுப்பாட்டினால் ஏற்பட்ட போக்குவரத்து பிரச்சினை காரணமாக கடந்த சில வாரங்களாக விடுமுறை வழங்கப்பட்டிருந்த அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் செயற்பாடுகள் முன்னர் அறிவித்த வகையில், இன்று (25) மீண்டும் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் 2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. 04

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு முன்னேறி செல்லுமுகமாக

# சர்வகட்சி அரசை அமைக்க இன்று முதல் பேச்சுவார்த்தை

சகல கட்சிகள் மற்றும் குழுக்களுடன் பேச்சு நடத்த அரசு முடிவு

லோரன்ஸ் செல்வநாயகம்,
ஷம்ஸ் பாஹிம்



சர்வகட்சி அரசாங்கத்துடன் ஒன்றிணையுமாறு SLFP, SJB, JVP, TNA, SLMC உட்பட சகல கட்சிகளுக்கும் அரசாங்கம் அழைப்பு விடுப்பு

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சரவையிலும் ஆராயப்பட்டதோடு பிரதமர் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் ஆரம்ப கட்ட பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக அறிய வருகிறது. எதிர்வரும் இரு வாரங்களில் சர்வகட்சி அரசாங்கம் உருவாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். பாராளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் புதிய பிரதமர் தெரிவான 04

## ரயில் நிலைய அதிபர்களின் வேலை நிறுத்தம் நிறைவுக்கு வந்தது




டிக்கட் விநியோகம் நடக்காததால் இலவசமாக பயணித்த பயணிகள்

இலங்கை புகையிரத நிலைய அதிபர் சங்கம் மேற்கொண்ட தொழிற்சங்க போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. ரயில் கட்டண உயர்வு தொடர்பான முறைமையில் குழப்பம் இருப்பதாக தெரிவித்து நேற்று முன்தினம் மாலை முதல் இந்த தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக டிக்கட் விநியோகம் இடம்பெறவில்லை. 04



மது அருந்திய சிலரால் கொடூரச்செயல்;

### ஓடும் ரயிலிலிருந்து தாக்கி வீசப்பட்ட பாதுகாப்பு ஊழியர் 03

## 33,000 மெ.தொன் Gas மாத இறுதிக்குள் வரும்

தமது இலக்கு அதுவே என்கிறது லிற்றோ



33 000 மெற்றிக் தொன் எரிவாயுவை இம் மாதத்துக்குள் நாட்டுக்கு கொண்டு வருவது இலக்காக உள்ளதாக லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த இலக்கை அடைவதற்காக எரிவாயு அடங்கிய மேலும் 6 கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன. நுகர்வோருக்கு தொடர்ந்து எரிவாயு 04

## டலஸ் தலைமையில் புதிய கூட்டணியை ஸ்தாபிக்க ஆலோசனை!

திஸ்ஸ விதாரன எம்.பி



லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகபெரும தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்கள் அவதானம் செலுத்தி வருகின்றனர்.

கூட்டணியாக சர்வ கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணைவது குறித்தும் ஆலோசனைகளை முன்னெடுத்து வருவதாக லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார். நிகழ்கால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 04

## நாட்டைக் கட்டியெழுப்ப எதிர்கால வேலைத்திட்டம்

தேசிய பேரவையும் உருவாக்கப்படும் - சஜித்




மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேசிய பேரவையொன்று உருவாக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அனைத்து தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் போன்றவற்றை ஒன்றிணைத்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான எதிர்கால வேலைத்திட்டம் குறித்து திட்டவட்டமான புரிதலுக்கு வர வேண்டும் என எதிர்க்கட்சித் 04

## மனோ, திகா, ரிஷாத் அமைச்சர்களாகின்றனர்?

தென் பகுதி ஊடகங்கள் ஆரூடம்





புதிய அமைச்சரவை வெள்ளிக்கிழமை (23ம் திகதி) பதவியேற்ற நிலையில் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் மேலும் 12 அமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் தற்போது 18 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 04

வளங்களுக்கும் உயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாது

## வன்முறையற்ற அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி

அரசின் நிலைப்பாட்டை இராஜதந்திரிகளுக்கு விளக்கிய ஜனாதிபதி

லோரன்ஸ் செல்வநாயகம்

வன்முறையற்ற, அமைதியான கூட்டங்களுக்கான உரிமை உறுதி செய்யப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றியமை தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச இராஜதந்திரிளுக்கு விளக்குமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்றுள்ள இந்த சந்திப்பின் போதேஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அரசாங்கத்தின் 04

எரிபொருளை பதுக்கி வைத்த குற்றச்சாட்டு;

## நிலைய முகாமையாளருக்கு 3 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறை

அநுராதபுரம் பதில் நீதவான் அதிரடி தீர்ப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்



நுகர்வோரின் பாவனைக்காக எரிபொருளினை விநியோகம் செய்யாது மோசடியான முறையில் பதுக்கிவைத்த எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஒருவருக்கு அநுராதபுரம் நீதிமன்ற பதில் நீதவான் ருத்ரிகா த சில்வா ஹேவாவசத்தினால் மூன்று வருட காலம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டணை வழங்கப்பட்டுள்ளது. எரிபொருளை பதுக்கி வைத்துவிட்டு எரிபொருள் இல்லை 04

ரூ. 74 கோடி மதிப்பிலான 17ஆயிரம் தொன் எடை;

## தமிழக அரசின் நிவாரண பொதிகளுடன் 3ஆவது கப்பல்

சனியன்று தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டது

திருச்சிஎம்.கே.ஷாகுல்ஹமீது



ரூ. 74 கோடி மதிப்புள்ள சுமார் 16 ஆயிரத்து 650 தொன் அரிசி, 250 தொன் பால்பவுடர், 50 தொன் மருந்து பொருட்கள் என 17 ஆயிரம் தொன் 04



### தமிழ் தரப்பினரிடையே மூன்று விதமான பிரிவுகள்

ஆரோக்கியமானதல்ல -சுரேஷ் 03



### இலங்கையர் சிலருக்கு இந்திய கடவுச்சீட்டு

தமிழக பொலிஸாரால் தீவிர விசாரணை 03



### எரிபொருள் வரிசையில் நின்ற சமுர்த்தி உத்தியோகத்தர் மரணம்

பொத்துவில் பகுதியில் சனியன்று சம்பவம் 03

## UNP தவிசாளர் வஜிர எம்.பியாகிறார்

அமைச்சராகவும் வாய்ப்பு



ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதையடுத்து வெற்றிடமாகியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்படவுள்ளதோடு அவருக்கு அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 27ஆம் திகதி அவர், 04

உலகில் குரங்கு அம்மை உச்சம்;

## அவசர கால நிலையாக அறிவித்தது WHO




ஆபிரிக்க பிராந்தியத்தில் முதல்முறையாகக் கண்டறியப்பட்ட குரங்கு அம்மை, தற்போது பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது. குரங்கு அம்மை நோயால் உலகம் முழுவதும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குரங்கு அம்மை நோயை சர்வதேச நெருக்கடியாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. 04

## ஜனாதிபதி மாளிகையில் திருடியோர் கண்டுபிடிப்பு

CCTV கமராவின் உதவியுடன் விசாரணைகள்



ஜனாதிபதி செயலகத்திற்கு கடந்த 9ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை வருகை தந்தவர்கள் குறித்து அத்துமீறிய பிரவேசம் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழைந்த போராட்டக்காரர்களினால் அங்கிருந்த பல பொருட்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 04

## அதிவேக வீதிகளின் வருமானத்தில் வீழ்ச்சி

நாளாந்தம் 70 சதவீதத்தால் குறைவு



அதிவேக வீதிகளின் நாளாந்த வருமானம் சுமார் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எஸ். வீரகோன் தெரிவித்தார்.

சராசரியாக அதிவேக வீதிகளின் நாளாந்த வருமானம் 30 மில்லியனுக்கும் அதிகமாகவிருந்தது. 04

## கடன் அட்டைகளுக்கான வட்டி வீதங்கள் அதிகரிப்பு

36%மாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிப்பு



இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகள் கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதத்தை அதிகரித்துள்ளதோடு வருடாந்த வட்டி வீதம் 36% வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வங்கிகள் தெரிவிக்கின்றன.ஏப்ரல் 08 ஆம் திகதி, மத்திய வங்கியின் நாணயச் சபை கடன் அட்டைகளுக்கு வழங்கப்படும் வட்டி வீதங்களில் விதிக்கப்பட்ட வரம்புகளை நீக்க தீர்மானித்தது. 04

# புதிய பிரதமர் தினேஷின் அரசியல் விவேகம் சர்வதேச உறவுகளைப் பலப்படுத்தும்

## அமைச்சர் நஸீர் அஹமட் புகழாரம்

சிறந்த அரசியல் பாரம்பரியம் மற்றும் குடும்பப் பின்னணியுள்ள தினேஷ் குணவர்தன, பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளதால் ஜனநாயக கதவுகள் அகலத்திறக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமர் தினேஷ் குணவர்தனவை வாழ்த்தி அமைச்சர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தினேஷ் குணவர்தனவின் அரசியல் ஆளுமை, நமது நாட்டுக்குத் தேவையான சர்வதேச உறவுகளை விரிவுபடுத்தி உறுதியாக்கும். நிதானம் மற்றும் மிதவாதச் சிந்தனைகளால் அரசியலில் புடம் போடப்பட்டவர் புதிய பிரதமர் தினேஷ். இடதுசாரி அரசியலில் தடம் பதித்த பிரதமர் தினேஷ், நாட்டின் முன்னணி வகித்த பிர



தமர் மற்றும் ஜனாதிபதிகளுடன் இணைந்து பணியாற்றிய பழுத்த அரசியல்வாதி. சிறுபான்மை சமூகங்களின் அரசியல் அபிலாஷைகள் அரசியலமைப்புக்கு முரணாகாத வகையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தவர்.

இந்தக் கொள்கையுடன்தான் அவர், அமைச்சரவையில் செயலாற்றி வருகிறார். இவ்வாறான ஒருவரின் தலைமையில், அமைச்சராக பணியாற்றக் கிடைத்ததை வரப்பிரசாதமாகவே கருதுகிறேன்.

நாட்டின் முன்னணி அரசியல்வாதியான பிலிப் குணவர்தனவின் புதல்வரான தினேஷுக்கு பிரதமர் பதவி வழங்கியமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் விவேகத்தையே வெளிப்படுத்துவதாகவும் அமைச்சர் நஸீர் அஹமட் மேலும் தெரிவித்துள்ளார்.



கர்நாடகாவுக்கு அண்மையில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரன், கர்நாடக மாநிலத்தின் தலைமைச் செயலாளர் திருமதி வந்திதா சர்மாவை கர்நாடக சட்டமன்ற வளாகமான விதான சவுதாவில் சந்தித்தார். துணை உயர்ஸ்தானிகர் அவரது புதிய நியமனத்திற்கு தனது பாராட்டுக்களை தெரிவித்ததுடன் இந்த நெருக்கடியான தருணத்தில் 'இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான' சாத்தியமான வழிகள் குறித்து கலந்துரையாடினார்.

## மாநகரசபை உறுப்பினராக நியமனம்




திருமதி ரதினி பிரதீப்குமார், கொழும்பு மாநகரசபையின் ஜனநாயக மக்கள் முன்னணியின் (DPF) உறுப்பினராக திருமதி ரதினி பிரதீப்குமார் கட்சியால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது நியமனம் தொடர்பான உறுதியுரையை கட்சித் தலைவர் மனோ கணேசன் எம்பியிடம் வழங்கி நியமனத்தை பெற்றுக்கொண்டார். தொழில்ரீதியாக தமிழ் மொழி, இந்து சமயம், சிங்கள ஆங்கில இணைப்பு மொழி பாட ஆசிரியரும் ஆங்கில பட்டய (diploma) தகைமையாளருமான, ரதினி பிரதீப்குமார், கொழும்பு மாநகரசபையில் ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர் வரிசையில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் வண்ணம் இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# கெச்சிமலை செய்கு நாயகத்தின் மறைவு ஈடுசெய்ய முடியாததாகும்

## பேருவளை நகர சபை எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி அனுதாபம்

வரலாற்று புகழ்மிக்க பேருவளை கெச்சிமலை தர்ஹாவின் ஷெய்ஹ் நாயகம் அலவியதுல் காதிரி சங்கைக்குரிய அல்ஹாஜ் காலிப் அலவி (அலவியதுல் காதிரி) யின் திடீர் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைந்ததாக பேருவளை நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தனது மூத்த சகோதரரான அஷ்ஷெய்கு ஹம்ஸா பின் ஆலிம் அலவியதுல் காதிரியின் மறைவைத்தொடர்ந்து மறைந்த அஷ்ஷெய்கு காலிப் அலவி அவர்கள் மேற்படி தர்ஹாவின் ஷெய்ஹ் நாயகமாக நியமிக்கப்பட்டார். அமைதியான சுபாவமும் நடத்தையும் கொண்ட அன்னார் அனைவருடனும் புன்முறுவலுடன் கதைக்கக்கூடியவராக காணப்பட்டதோடு என்னுடன் மிகவும் நெருங்கிப்பழகியவர்.

சுமார் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக ஆன்மீக தலைவராக இருந்து தான் சார்ந்த தரீக்காவுக்கு அளப்பரிய சேவை செய்ததை இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவுகூர்கிறேன். அதேபோல் கெச்சிமலையை சூழவுள்ள பிரதேச பெரும்பான்மை சமூகம் இவர் மீது வைத்துள்ள மரியாதைக்கு ஜனாஸா ஊர்வலத்தின் போது அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தியமை சான்றுபடுத்துகிறது. அன்னார் விட்டுச்சென்ற நற் பணிகள் காலத்தால் அழியாதவை. அன்னாரின் பணிகள் தொடரப்பட வேண்டும்.

அன்னாரின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் நற்கருமங்களை வல்ல இறைவன் ஏற்றுக்கொண்டு மேலான ஜென்னத்துல் பிர்தௌஸை வழங்க வேண்டும் என தான் பிரார்த்திப்பதாகவும் ஹஸன் பாஸி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகன இறுதி இலக்கத்தை பின்பற்றாததால் அமைதியின்மை

## கனேவல்பொல எரிபொருள் நிலையத்தில் சம்பவம்



*கெக்கிராவ குறூப் நிருபர்*

கனேவல்பொல எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் பகிர்ந்தளிப்பதில் முறைகேடு நடைபெறுவதாக எரிபொருள் வரிசையில் நிற்போர் தெரிவிக்கின்றனர். வாகன இலக்கத்தகட்டின் இறுதி இலக்கத்திற்கு அமையவே எரிபொருள் வழங்கப்படும் என்று எரிசக்தி அமைச்சரினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வெள்ளிக்கிழமையன்று 6,7,8, ஆகிய இலக்கங்களுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதும் (22) வெள்ளிக்கிழமை அன்று மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அன்றைய தினத்திற்கு அனுமதிக்கப்படாத இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கும் எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸார் கடமையில் இருக்கும் போதே இவ்வாறு வழங்கப்பட்டமையால் அங்கு சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

இது தொடர்பில் கடமையில் இருந்த பொலிசாரிடம் வினவியபோது, குறித்த வாகனங்கள் தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு அதிகமாக வரிசையில் நின்றதால் அவர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டதாகவும் அவ்விடத்துல் ஏற்பட்ட அமைதியின்மையினால் வரிசையில் நிற்போருடன் கலந்துரையாடி மூன்று நாட்களாக வரிசையில் நின்ற குறித்த வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் 500/ ரூபாவுக்கு மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். இதன்பின் நிலமை வழமைக்கு திரும்பியது.

## மலைச்சாரல்

# 46 வருடங்களாக கைவிடப்பட்ட புகையிரத காணிகளில் பயிர்ச்செய்கை

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

நாட்டில் ஏற்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள உணவுப்பற்றாக்குறைக்கு முகங்கொடுக்கும் வகையில் கைவிடப்பட்ட காணிகளில் பொது மக்கள் பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இம்முயற்சியின் இன்னொரு திட்டமாக களனிவெளி கைவிடப்பட்ட புகையிரத வீதியில் மிகுதியாக உள்ள நிலப்பரப்புகளில் அயல் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் சிறு சிறு காணித் துண்டுகளாகப் பிரித்து பல்வேறு மரக்கறி மற்றும் பழச்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவிசாவளை தொடக்கம் ஒப்பனாயக வரையிலான கைவிடப்பட்ட புகையிரத வீதியிலேயே இந்த பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இவ்வீதியில் காணப்படும் நிலப்பரப்பை மக்கள் சிறு வேலிகளாளால் வரையறுத்துக் கொண்டு இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.



தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் தேவஸ்தானத்திலிருந்து இரண்டாவது வருடமாக கதிர்காம கந்தனை தரிசிக்க கால்நடையாக பக்த அடியார்கள் யாத்திரை செல்லும் பயணம் ஆரம்பமாகியது. பாத யாத்திரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் இணைந்து கொண்டு மிகவும் பக்தியுடன் வழிநெடுக கதிர்காமம் கந்தனின் பக்தி கீதம் இசைத்தவாறு சென்றனர். இவர்கள் அனைவரும் எதிர் வரும் 29, ம் திகதி கொடி ஏற்றதினத்தன்று கதிர்காமம் சென்று அன்றைய பூஜையில் கலந்து கொள்வார்கள். படம்: மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.

# இரவில் வீட்டினுள் நுழைந்தவர் அடித்துக் கொலை நால்வர் கைது

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

இரவு நேரத்தில் வீட்டினுள் நுழைந் த ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்த சம்பவம் ஒன்று பலாங்கொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. பலாங்கொடை கிரிந்திகல சைலேந்திர மாவத்தை பிரதேசத்தி ல் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் இதே பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது நபர் ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

# தேயிலையுடன் லொறி குடைசாய்ந்து விபத்து

*ஹற்றன் சுழற்சி நிருபர்*

தேயிலைக்கொழுந்து ஏற்றிச்சென்ற லொறி ஒன்று கடியலென ஆற்று பகுதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளான நிலையில் படுகாயமடைந்த சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து நேற்று முன்தினம் (23.07.2022) இரவு 8 மணியளவில் இடம்பெற்றதாக அந்த தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாவலப்பிட்டி கெட்டபுலா கடியலென தோட்டப் பகுதியில் இருந்து கெட்டபுலா தோட்டத்திற்கு தேயிலை கொழுந்து ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு வீதியை விட்டு விலகி தேயிலை கொழுந்துடன் விபத்துக்குள்ளானதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது!

*மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்*

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் ஸ்ரதன் பகுதியில் சட்ட விரோதமான முறையில் நீண்ட நாட்களாக அனுமதி பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் ஹட்டன் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக குறித்த பிரிவின் பொறுப்பதிகாரி பிரேமலால் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் நீண்ட நாட்களாக சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறுவதாக தகவல் கிடைத்ததனையடுத்து ஹட்டன் விசேட குற்றத்தடுப்புபிரிவைச் சேர்ந்த விசேட குழு ஒன்று (17) மாலை சுற்றிவளைப்பினை மேற்கொண்டுள்ளது.

இதன் போது மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நிலையில் எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்விற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

# அரசின் புதிய வேலைத்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் ஆயிரம் தொழில் வாய்ப்புகள்

*அக்குறணை குறூப் நிருபர்*

அரசின் புதிய வேலைத்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புகள் உருவாகியுள்ளதாக கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் வைத்து அவர் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது 'சௌபாக்கியா' வேலைத் திட்டத்தின் கீழ் இவ்வாறு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில் வாய்ப்புகள் எற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கிராமிய மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள இத்தகைய துறைகளில் வலுவான முதலீட்டாளர்கள் உருவாக இடமிருப்பதாகவும் தெரிவித்தார். எனவே அதற்காக சிறிய முதலீட்டாளர்கள் ஒன்றிணைந்த அடிப்படையில் குழுவாக இயங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



எனவே அதற்காக முதலீட்டுக்கிராமங்களை உருவாக்குதல் மூலம் ஒரு குழுவாக ஒருமித்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அது வளர்ச்சி அடைய வசதியாக இருக்கும் என்றும், இது சவால்களை முறியடித்து முன் செல்ல வழி வகுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## எம்பிலிப்பிட்டிய காட்டுப் பகுதியில்

# கஞ்சா சேனை முற்றுகை 75000 செடிகள் அழிப்பு

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

எம்பிலிப்பிட்டிய முல்லகஸ்யாய காட்டுப்பகுதியில் கஞ்சா சேனை ஒன்று பொலிஸாரால் முற்றுகையிட்டப்டுள்ளது. அத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் மிகவும் இரகசியமாக நடத்தப்பட்டு வந்த இந்த வியாபாரம் பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

முற்றுகையின் போது சுமார் 5 அடிக்கும் அதிக உயரமான சுமார் 75000 கஞ்சா செடிகள் பிடுங்கப்பட்டு அழிக்கப்பட்டதாக விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இழுவை முறை இரத்தினக்கல் அகழ்வால் நீர்நிலைகள் சுற்றாடல் பாதிப்பு

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

இரத்தினபுரி மாவட்டத்தின் பல ஆறுகளில் இடம்பெற்று வரும் இழுவை முறை இரத்தினக்கல் அகழ்வு முறையால் ஆறுகளுக்கும் ஆற்றங்கரைகளுக்கும் பாரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது

ஆற்றின் நடுவே குழிகளை தோண்டி ஓடும் நீரின் உதவியைக் கொண்டு இந்த இழுவை முறை இரத்தினக்கல் அகழ்வு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இச்செயற்பாட்டினாலேயே இவ்வாறு பாதிப்புக்கள் ஏற்படுவதாக பிரதேச மக்களும் சுற்றாடலியலாளர்களும் புகார் தெரிவிக்கின்றனர்.

# தோட்ட வடிகால் சீரமைப்புக்காக கொண்டு வரபட்ட சீமெந்து திருட்டு

*மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்.*

ஹொரன பிலான்டேசனுக்கு உரித்தான சாமிமலை பெயர்லோன் தோட்டத்தில் நேற்று முன்தினம் தோட்ட தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் உள்ள வடிகால்கள் திருத்தம் செய்ய கொண்டு வந்த சீமெந்து மூடை 9 களவு போனதாக தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட முகாமையாளரின் பணிப்புரை படி தோட்ட உதவி முகாமையாளர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக புகார் ஒன்றை செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து அத்தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# கைத்தொழில் உற்பத்தி சந்தைப்படுத்தும் நிலையங்கள்

*அக்குறணை குறூப் நிருபர்*

கண்டி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் காரியாலங்களில் உள்ளூர் கைத்தொழில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முதலீட்டாளர்களுக்கு கைகொடுக்கும் வகையில் இவை அமைக்கப்பட்டு வருவதாக கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார். (23)

இத் திட்டத்தின் கீழ் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் காரியாலய வளவில் அமைக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றை கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் மற்றும் குழுவினர் பார்வையிட்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜூலை 25 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
24 முதல் 29 வரை
சுபஹ் - 04.42
லுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆடி 9
ராகுகாலம் : பகல் : 07.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 7.30வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: துவாதசி



ஜனாதிபதியின் தலைமையில்

# ஆளும் கட்சி கூட்டம் நாளை

லோரன்ஸ் செல்வநாயகம்

ஆளும் கட்சியின் விசேட கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாளை பிற்பகல் நடைபெற வுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் நடைபெறுகின்ற முதலாவது ஆளும் கட்சி கூட்டம் இதுவாகும்.

நாளை பிற்பகல் நடைபெறவுள்ள இந்த விசேட கூட்டத்தில் அவசர கால சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவது மற்றும் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்குவது ஆகியவை தொடர்பில் இந்த விசேட பேச்சுவார்த்தையின் போது முக்கிய கவனம் செலுத்தப்படலாம் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்க அலுவலகங்களுக்கு:

# மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களை அழைப்பது தொடர்பான சுற்று நிருபம்

## மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பு

## பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசாங்க அலுவலகங்களுக்கு ஊழியர்களை சேவைக்கு அழைப்பதை மட்டுப்படுத்தும் வகையில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து வசதிகளில் நிலவிய அசௌகரியங்களை கருத்திற் கொண்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கடந்த ஜூன் 20 ஆம் திகதி அரசாங்க ஊழியர்களை கடமைக்கு அழைப்பதை மட்டுப் படுத்தும் வகையிலான தீர்மானத்தை எடுத்திருந்தது. எவ்வாறாயினும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர்

04

# ரயில் பாதையோரத்திலிருந்து இரு சடலங்கள் மீட்பு

அம்பேபுஸ்ஸ மற்றும் போத்தளை புகையிரத நிலையங்களுக்கு இடையிலான குறுகிய ரயில் பாதை ஓரத்தில் கீழே விழுந்து உயிரிழந்த இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சாரம் மற்றும் சட்டை அணிந்திருந்த இவர்கள் இருவரும் மிகவும் வயதானவர்களாக காணப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறுகிய தண்டவாளத்தின் ஊடாக செல்கையில் ரயிலில் அடிபட்டார்களா அல்லது ரயிலில் இருந்து விழுந்தார்களா என்பது குறித்து பொலிஸார்

04

விஞ்ஞானப்பட்டப்பின் படிப்பு நிறுவனம்
பேராதனை பல்கலைக்கழகம்

2022/2023 ஆண்டிற்காக நிழற்படப்பிரதி சேவையை (Photocopy Services) வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரல்

விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு 2022/2023 ஆண்டில் நிழற்படபிரதிச் சேவையை வழங்குவதற்காக அனுபவமுள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து 2022.07.25 முதல் 2022.08.15 அன்று பி.ப. 2.30 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மீளளிக்கப்படாத ரூபா 1000.00 இற்கான தொகையை இந்நிறுவனத்தின் சிறாப்பருக்கு அல்லது விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவனம் என்ற பெயரில் பேராதெனிய இலங்கை வங்கியில் நடைமுறைப்படுத்தப்படும் கணக்கு இலக்கம் 0081041788 இற்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து இதற்கான விபரக்குறிப்புக்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களை 2022.07.25 முதல் 2022.08.14 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இந்நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் அனைத்து விண்ணப்பங்களுடனும் இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற வணிக வங்கியொன்றினால் வழங்கப்படும் ரூபா 7500.00 பெறுமானமுள்ள 2022.10.31 வரை செல்லுபடியாகும் மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையமொன்று அல்லது அத்தொகையை இந்நிறுவனத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்று விண்ணப்பங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் 2022.08.15 அன்று பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'தலைவர், பெறுகைக் குழு, (சிறியளவான) விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவனம், த. பெ. 25, பேராதெனிய என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது விஞ்ஞானப்பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பிரதிப்பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'நிழற்படப்பிரதி சேவையை நடைமுறைப்படுத்தலிற்கான விண்ணப்பங்கள் கோரல் - 2022 - 2023' எனக்குறிப்பிடுதல் கட்டாயமாகும். தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்கள் சேவையை ஆரம்பிக்க முன்னர் மீளளிக்கப்படும் ரூபா 30,000.00 இற்கான பிணையை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் மாதாந்த மின் கட்டணம் மற்றும் நில வாடகையையும் செலுத்துதல் வேண்டும்.

பணிப்பாளர்,
விஞ்ஞானப்பட்டப்பின்படிப்பு நிறுவனம்,
த.பெ. 25, பேராதெனியா,

2022.07.25

# இந்த மாதத்தில் 8900 பேருக்கு டெங்கு தீவிரமாகும் அபாயம்

## நாடளாவிய ரீதியில் இன்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுப்பு



டெங்கு நோய் தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் இன்று நாடுபூராவும் டெங்கு ஒழிப்பு தினம் முன்னெடுக்கப்படுகிறது. கடந்த 7மாத காலத்தினுள் 44 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதோடு எதிர்வரும் நாட்களில் இது தீவிரமடையும் அபாயம் உள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் மாத்திரம் 8900 டெங்கு

04

மது அருந்திய சிலரால் கொடூரச்செயல்;

# ஓடும் ரயிலிலிருந்து தாக்கி வீசப்பட்ட பாதுகாப்பு ஊழியர்

## யாழ். தேவி ரயிலில் பரிதாபகரமாக மரணம்



ரயில் பயணி ஒருவரால் உதைக்கப்பட்டதால் கீழே வீழ்ந்து ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெயாங்கொட பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வெயாங்கொட வதுரவ ரயில் நிலையத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 52 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஷெர்லி லக்ஷ்மன் திஸாநாயக்க என்பவரே

04

# தமிழ் தரப்பினரிடையே மூன்று விதமான பிரிவுகள்

## ஆரோக்கியமானதல்ல சுரேஷ்




ஜனாதிபதி தெரிவின் போது தமிழ் தரப்பை பொறுத்தவரையில் ஒருமித்த கருத்து ஒருமைப்பாட்டுடன் செயற்படவில்லை எனவும் தமிழ் தரப்பினர் மூன்று பிரிவுகளாக நின்று வாக்களித்தது என்பது பாதிக்கப்பட்ட இனத்திற்கு ஆரோக்கியமானதல்ல என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து

04

# மீண்டும் தலைதூக்கும் கொரோனா பரம்பல்

## சுகாதார பிரிவு கடும் எச்சரிக்கை



இலங்கையில் கொவிட் வைரஸ் பரம்பல் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளதாக சுகாதாரத்துறை புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

நேற்றைய தினத்தில் மாத்திரம் 72 கொவிட் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் வெளிநாடு சென்று திரும்பியோர் எவரும் இல்லை என்பதுடன்

04

சேதமாக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையின்

# படிக்கட்டுகளை திருத்த பத்து கோடி ரூபா தேவை

## தொல்லியல்துறை அதிகாரிகள் தெரிவிப்பு



ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் புகுந்த பின் சேதமடைந்த மேல் தளத்துக்குச் செல்லும் படிகளை புனரமைக்க பத்து கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் என தொல்லியல் துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

04

# இலங்கையர் சிலருக்கு இந்திய கடவுச்சீட்டு

## தமிழக பொலிஸாரால் தீவிர விசாரணை



இலங்கையர்கள், வெளிநாடு செல்ல இந்திய கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், தமிழக கியூ பிரிவு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சட்டவிரோத நடவடிக்கை தொடர்பாக கடந்த 2019 ஆம் ஆண்டு வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் 5 பொலிஸ் அதிகாரிகள், இந்திய குடிவரவு மற்றும் குடியகல்வு பணியகத்தின் 14 அதிகாரிகள், இந்திய தபால் திணைக்களத்தின் 2 அதிகாரிகள் உட்பட 41 பேர் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

04

# எரிபொருள் வரிசையில் நின்ற சமுர்த்தி உத்தியோகத்தர் மரணம்

## பொத்துவில் பகுதியில் சனியன்று சம்பவம்



அம்பாறை பொத்துவிலில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (23) காலை 11 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில் லகுகலையைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் 51 வயதுடைய திசாநாயக்க என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். பொத்துவில் கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னாள் பெற்றோலை பெறுவதற்காக சம்பவ தினம் காலையில் இருந்து காத்திருந்த ஒருவரே திடீரென மயக்கமுற்று கீழே வீழ்ந்து மாரடைப்பினால் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 33,600 லீற். பெற்றோல் பவுஸர் மீரிகமவில் விபத்து

## பேராதனை நோக்கி செல்கையில் சம்பவம்



மீரிகம தங்கொவிட்ட வீதியில் ஹலுகம மலையில் சனிக்கிழமை (23) பிற்பகல் பெற்றோல் ஏற்றிச் சென்ற பவுஸர் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக மீரிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முத்துராஜவெலயிலிருந்து பேராதனைக்கு கொண்டு செல்லப்பட்ட 33,600 லீற்றர் பெற்றோல் இந்த பவுஸரில் உள்ளதாக

04



## மனோ, திகா, ரிஷாத்....

12 அமைச்சர்கள் மற்றும் 30 ராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளதாக அந்த நாளிதழ் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

இதில் முன்னாள் அமைச்சர்களான ரிஷாத் பதியுத்தீன், மனோ கணேசன், திகாம்பரம் உள்ளிட்டவர்களோடு ஐக்கிய மக்கள் சக்தியின் 3 அல்லது 6 பேர் வரை அமைச்சர்களாக நியமிக்கப்படுவர்கள் என குறித்த நாளிதழ் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

## அவசர கால நிலையாக...

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு பேசிய அதன் தலைவர் டெட்ரோஸ், “இதுவரை 75 நாடுகளைச் சேர்ந்த 16 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 5 பேர் இதுவரை பலியாகியுள்ளனர். இதற்கு முன்இல்லாத அளவு பல்வேறு நாடுகளில் குரங்கு அம்மை நோய் பரவி வருகிறது.

ஆய்வாளர்களின் கருத்துகளின்படி குரங்கு அம்மை நோயை சர்வதேச அவசர நிலையாக அறிவிக்கிறோம்” எனத் தெரிவித்தார்.

## UNP தவிசாளர்...

பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் அமைச்சராக பதவிப் பிரமாணமும் செய்து கொள்ளவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இன்னும் இரண்டு வாரங்களில் உருவாக்கப்படவுள்ள சர்வ கட்சி அரசாங்கத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் அமைச்சுப் பதவி வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டைக் கட்டியெழுப்ப...

தலைவர் தெரிவித்தார்.

அந்தவகையில் தேசிய பேரவை ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நிறுவப்படவுள்ளதாக சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

இதனை அடுத்து குறித்த பேரவையில் எட்டப்படும் முற்போக்கான பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நாடு முன்னேற்றமடைய வேண்டும் என்பதனால் அரசாங்கத்தின் சாதகமான செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படும் என சஜித் பிரேமதாச கூறினார்.

நாட்டை பயனுள்ள வகையில் மீண்டும் கட்டியெழுப்ப தேசிய ஒருமித்த கருத்து எட்டப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## ரயில் நிலைய அதிபர்களின்......

நேற்று பயணிகள் டிக்கட் இன்றி இலவசமாக ரயிலில் பயணித்ததாக அறிய வருகிறது. இதனால் ரயில்வே திணைக்களத்திற்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கட்டண உயர்வு நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட இருந்தது. ஆனால் புகையிரத நிலைய அதிபர் சங்கம் 48 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டதால் கட்டண அதிகரிப்பு முன்னெடுக்கப்படவில்லை. அத்தகையோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்திருந்தது.

இ தேவேளை ரயில்வே பொதுமுகாமையாளருடன் நேற்று பிற்பகல் நடைபெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து தொழிற்சங்க போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர இலங்கை புகையிரத நிலைய அதிபர் சங்கம் தீர்மானித்துள்ளது.

ரயில் நிலையங்களில் உள்ள டிக்கட் விநியோக பீடங்கள் மூடப்பட்டிருந்தன. (பா)

## இந்திய ஜனாதிபதியாக...

வாழ்த்து தெரிவித்துள்ளதோடு பல அரச தலைவர்களும் இவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். தேர்தல் வாக்கு எண்ணிக்கை ஆரம்பமானது தொடக்கம் முதலே திரௌபதி முர்மு முன்னிலை வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் மொத்தம் பதிவான 4,754 வாக்குகளில் 53 வாக்குகள் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 4,701 வாக்குகள் எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மொத்த வாக்குகளின் 2,824 வாக்குகள் பெற்று திரௌபதி முர்மு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவருக்கு மொத்தம் 6,76,803 வாக்குகள் மதிப்பு கிடைத்துள்ளது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சிகள் கூட்டணியின் பொது வேட்பாளர் யஷ்வந்த் சின்ஹா 1,877 வாக்குகள் பெற்றுள்ளார். அவரின் மொத்த வாக்குகள் மதிப்பு 38,0,177 ஆகும். இதன்மூலம் திரௌபதி முர்மு நாட்டின் 15ஆவது ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். திரௌபதி முர்மு ஜனாதிபதியானதன் மூலம் நாட்டின் முதல் பழங்குடி பெண் ஜனாதிபதி எனும் பெருமையை அவர் பெறுகிறார்.

## அதிவேக வீதிகளின்...

தற்போதைய சூழ்நிலையில் இந்நாட்களில் நாளாந்த வருமானம் 8 மில்லியனாக குறைந்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## கடன் அட்டைகளுக்கான...

அதன்பின், வட்டி வீதங்கள் ஏற்கனவே இருந்த 18% வீதத்திலிருந்து 24% வீதமாகவும், பின்னர் 30% வீதமாகவும், இப்போது மீண்டும் 36% வீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## டலஸ் தலைமையில் புதிய கூட்டணியை...

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைந்து சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்காவிடின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமே தோற்றம் பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

## முகக்கவசம் கட்டாயம்...

அபாயம் அதிகம் உள்ள பகுதிகளிலாவது கட்டாயம் முகக் கவசம் அணிவது குறித்து அதிகாரிகளின் கவனம் செலுத்த வேண்டும் என சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

உலகில் பல நாடுகள் கொவிட் 19 தொடர்பில் சாதகமான முடிவுகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், இலங்கை அது தொடர்பில் இதுவரை கவனம் செலுத்தவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இன்று முதல் பாடசாலைகள்...

இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணை கற்றல் செயற்பாடுகள் இடம்பெறும் காலப்பகுதி தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் முதலாம் தவணை பரீட்சை இடம்பெற மாட்டாது எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழைமைகளில் மாத்திரம் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ள கல்வி அமைச்சு, புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

தென்மாகாண சபையின் கீழுள்ள பாடாசாலைகள் 5 நாட்களும் நடைபெற உள்ளது.

## 33,000 மெ.தொன் Gas....

வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கில் இவ்வாறு எரிவாயு இறக்குமதி செய்யப்படுகிறது.

இதற்கமைய 3,500 முதல் 3,700 மெற்றிக் தொன்னுக்கு இடைக்கப்பட்ட 6 எரிவாயு கப்பல்கள் எதிர்வரும் நாட்களில் நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 5 எரிவாயு கப்பல்கள் நாட்டுக்கு வந்துள்ளன.

நேற்றைய தினமும் 3740 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் ஒன்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

தற்போது நாளாந்தம் ஒரு லட்சம் சமையல் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுவதாகவும் தொடர்ந்தும் எரிவாயுவை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

## விநியோகத்தை உறுதிப்படுத்தவும்...

நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்கள் ஊடாக பாடசாலை பஸ்கள் மற்றும் வான்களுக்கான எரிபொருளை விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி, கடற்றொழில், சுற்றுலா, விவசாயம் மற்றும் பொதுச் சேவை ஆகிய துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு டிப்போக்கள் மற்றும் முப்படை முகாம்கள் மூலம் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வது தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் ஜனாதிபதி விக்கிரமசிங்க பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

QR குறியீட்டு முறையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

எதிர்காலத்தில் எரிபொருள் இருப்புக்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிதியளித்தல் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## நிலைய முகாமையாளருக்கு...

யென பொதுமக்களுக்கு பொய்யான தகவல்களை வழங்கிய குற்றச்சாட்டினை சந்தேகநபர் ஒப்புக்கொண்ட நிலையில் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

நுகர்வோர் அதிகார சபையின் அநுராதபுரம் பிராந்திய அலுவலக அதிகாரிகளினால் குறித்த சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் மேலதிக நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு விசாரணையை அடுத்தே மேலதிக நீதவான் இத்தீர்பினை வழங்கியுள்ளார்.

அநுராதபுரம் விமான நிலைய வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஒருவருக்கே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை முடிவின் போது மூன்று மாத காலம் வழங்கப்பட்ட சிறைத்தண்டணையினையியே மூன்று வருடகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டணையாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கு மேலதிகமாக இவ்வாறான குற்றச்செயல்களை இனிமேலும் செய்யக்கூடாது என எரிபொருள் நிலைய முகாமையாளருக்கு நீதவானினால் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதுடன் நிலைய உரிமையாளருக்கு பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. நுகர்வோரது பாவனைக்கு வழங்காது பொய்யான தகவல்களை கூறி எரிபொருளினை பதுக்கிவைப்பதற்கு நுகர்வோர் சட்ட விதிகளுக்கு அமைய யாருக்கும் அனுமதி கிடையாது என நுகர்வோர் அதிகாரசபையின் அநுராதபுரம் அலுவலக பொறுப்பதிகாரி பீ.ஏ.சீ.பீ.பெரேரா சார்பில் நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டது .

எரிபொருளை பதுக்கியது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபடையினரால் தொடரப்பட்ட வழக்கு ஒன்றுக்கு இவ்வாரான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை வரலாற்றில் இதுவே முதல் தடவை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## வன்முறையற்ற அமைதியான...

இந்த நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமை தொடர்பான சர்வதேச இணக்கப்பாட்டின் 21 வது சரத்து மற்றும் அமைதியாக கூடுவதற்கான உரிமையை கட்டுப்படுத்துவதற்கான அரசியலமைப்பின் 14 (1) (ஆ) சரத்து ஆகிய இரண்டையும் தற்போதைய அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் இதன்போது ராஜதந்திரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

அரசாங்க கட்டிடங்களுக்கு தடைகளை ஏற்படுத்தி அதன் வளங்களை வேறு நோக்கத்திற்காக உபயோகிப்பதற்கு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என அமெரிக்க சிவில் சுதந்திர சங்கத்தின் ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

வளங்களுக்கும் உயிர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நகரங்களில் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கு இடமளிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்துடன் விகாரமாதேவி பூங்கா வெளியரங்கம், புதிய நகர மண்டபம், ஹை பாக் மற்றும் கம்பல் விளையாட்டரங்குகள் போன்ற கொழும்பு நிர்வாகப் பிரதேசத்தில் காணப்படும் இடங்களில் வன்முறைகளற்ற ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள வாய்ப்பு கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுவேளை கோட்டகம இணையம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்ட தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என தெரிவித்த அவர் பாதுகாப்பு படையினர் அவ்வாறு இணையத்தை நீக்கும் வகையில் செயல்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டமை உள்ளிட்ட சட்ட ரீதியான செயல்பாடுகள் தொடர்பிலும் சட்டமா அதிபர் இதன் போது ராஜதந்திரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வகட்சி அரசை அமைக்க...

நிலையில் கடந்த வெள்ளியன்று 18 பேர் கொண்ட இடைக்கால அமைச்சரவை நியமிக்கப்பட்டது. இந்த நிலையில் சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்காக எதிரணியில் உள்ள கட்சிகள் மற்றும் ஆளும் தரப்பில் உள்ள கட்சிகள் மற்றும் குழுக்களுடன் பேச்சு நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தி தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள அமைக்கப்பட்டுள்ள இடைக்கால அமைச்சரவையில் எதிர்வரும் இரண்டு வாரங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என தெரிவித்துள்ள அவர், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தேவை ஏற்பட்டால் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் அமைச்சர் தொகை அதிகரிக்கப்படும் எனவும் அறிய வருகிறது.

இதன்படி இன்னும் இரண்டு வாரங்களில் அமைக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகள் பாராளுமன்றத்தில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளையும் கொண்ட அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கவுள்ளார்.தற்போது இடைக்கால அமைச்சரவையொன்று செயற்பட்டு வருவதுடன், சர்வ கட்சி அரசாங்கம் அமைந்ததும் நிரந்தர அமைச்சரவை அமைக்கப்படவுள்ளது. இதேவேளை, சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது குறித்து இதுவரை எவ்வித தீர்மானமும் எட்டப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். கட்சித் தலைவர்கள் கூடி இது குறித்து இறுதி முடிவு எடுப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.சு.கவும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்காது என கட்சி செயலாளர் தயாசிரி ஜெயசேகர அறிவித்துள்ளதோடு த.தே.கூ வும் இதே நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

## தமிழக அரசின் நிவாரண...

நிவாரண பொருட்கள் என்பவற்றை இந்தியா மூன்றாவது கட்டமாக கப்பல் மூலம் அனுப்பி வைத்துள்ளது. இவற்றை அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், கனிமொழி எம்.பி., ஆகியோர் வைபவரீதியாக கொடியசைத்து அனுப்பி வைத்தனர்.

இலங்கையில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டில் சிக்கி வரும் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் என்று தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். அதன்படி முதலமைச்சர் முதல் கட்டமாக சென்னையில் இருந்து நிவாரண பொருட்கள் மற்றும் மருந்து பொருட்களை அனுப்பி வைத்தார். அதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் 2வது கட்டமாக தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில் இருந்து வி.டி.சி.சன் என்ற சரக்கு கப்பல் மூலம் ரூ.48 கோடியே 30 லட்சம் மதிப்பிலான 14 ஆயிரத்து 712 தொன் அரிசி, ரூ.7 கோடியே 50 லட்சம் மதிப்பிலான 250 தொன் பால் பவுடர், ரூ.11 கோடியே 90 லட்சம் மதிப்பிலான உயிர் காக்கும் மருந்து பொருட்கள் என மொத்தம் ரூ.67 கோடியே 70 லட்சம் மதிப்பிலான 15 ஆயிரம் தொன் பொருட்களை இலங்கைக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது.

இந்த நிலையில் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் இருந்து 3வது கட்டமாக சுமார் 17 ஆயிரம் தொன் நிவாரண பொருட்கள் அனுப்பும் பணி சனிக்கிழமை நடந்தது.

விடிசி சன் என்ற கப்பலில் ரூ. 54 கோடி மதிப்பிலான 16,500 தொன் அரிசி, ரூ. 6 கோடி மதிப்பிலான 250 தொன் பால் பவுடா், ரூ. 14 கோடி மதிப்பிலான 50 டன் உயிர் காக்கும் மருந்துகள் என மொத்தம் ரூ. 74 கோடி மதிப்பிலான 16,800 தொன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் : இலங்கை மக்களுக்கு நிவாரண பொருட்களை அனுப்ப வேண்டும் என மத்திய அரசின் அனுமதி பெற்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொருட்களை அனுப்பி வருகிறார். அந்த வகையில் சென்னையில் இருந்து முதல் கட்டமாக தமிழக முதல்அமைச்சர் பொருட்களை அனுப்பி வைத்தார். 2வது மற்றும் 3வது கட்டமாக தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில் இருந்து நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும். உலகில் எந்த ஒரு மக்களுக்கும் பாதிப்பு என்றால் முதலில் உதவுவது நமது தமிழ்இனம் தான் கை கொடுக்கும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதை நிரூபிக்க கூடிய வகையில் தான் தமிழக முதலமைச்சர் செயல்பட்டு வருகிறார் என்றார்.



பாடசாலைகள் இன்று ஆரம்பமாகும் நிலையில் ஜனாதிபதியின் பணிப்பில் பாடசாலை பஸ்களுக்கு நேற்று எரிபொருள் விநியோகிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

## ஜனாதிபதி மாளிகையில்...

மேலும் சிசிரிவி காட்சிகளின் உதவியுடன் அங்கு வந்தவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மாதம் 09 ஆம் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து பொருட்களை சேதப்படுத்தி அங்கிருந்த பழங்கால பொருட்களை திருடிச் சென்ற பிரதான கும்பலை பொலிஸார் தற்போது அடையாளம் கண்டுள்ளனர்.

அப்பகுதியில் உள்ள சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்த பிறகே இது தெரியவந்துள்ளது.

புலனாய்வு அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் அந்த நபர்களை கைது செய்வதற்கான விரிவான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் வெடிபொருட்கள் உள்ளதா என்பதை கண்டறிய வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு மத்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸின் மேற்பார்வையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## மட்டுப்படுத்தப்பட்ட... 03ஆம் பக்க தொடர்...

எம். எம். பி. கே. மாயாதுன்னே அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோருக்கும் நேற்று மீண்டும் அதன் ஒரு மாத காலத்தை நீடிக்கும் சுற்று நிருபத்தை அனுப்பியுள்ளார்.

மேற்படி சுற்று நிருபத்தை சாதகமாக்கிக் கொண்டு கடமைக்கு வரக்கூடிய அதிகாரிகள் கடமைக்கு சமூகமளிக்காமல் விடுவது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அதனூடாக அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க சில தினங்களில் பொது போக்குவரத்து சேவைகள் படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்பும்.

அதனைக் கவனத்திற் கொண்டு ஒன்லைன் மூலமாக மேற்கொள்ளப்பட முடியாத பொது மக்களுக்கான சேவைகளை தேவையான அதிகாரிகளை கடமைக்கு அழைத்து மேற்கொள்வதற்கு இந்த சுற்று நிருபம் தடையாக அமையாது என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## ரயில் பாதையோரத்திலிருந்து... 03ஆம் பக்க தொடர்...

விசாரணை நடத்தி வருகின்றனர்.

இரு சடலங்களும் மீரிகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த இருவர் தொடர்பில் எந்த தகவலும் வெளியாகவில்லை என அறிய வருகிறது.

## இந்த மாதத்தில் 8900... 03ஆம் பக்க தொடர்...

நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். கடந்த மாதம் அடையாளங் காணப்பட்ட டெங்கு நோயாளர்களில் 80 வீதமானவர்கள் மேல் மற்றும் குருணாகல்,இரத்தினபுரி,கேகாலை காலி, மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என அறிய வருகிறது.

இந்த நிலையில் இன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பொது இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளது. ஒரு மணி நேரமாவது தமது அலுவலகங்களில் சிரமதானம் மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

## ஓடும் ரயிலிலிருந்து தாக்கி... 03ஆம் பக்க தொடர்...

உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற நகரங்களுக்கு இடையிலான ரயிலில் இருவர் மது அருந்திக்கொண்டிருந்தனர்.

இவர்களிடம் குறித்த ரயில்வே பதுகாப்பு உத்தியோகத்தர் ''அவ்வாறு செய்ய வேண்டாம்'' என அறிவுறுத்தியதையடுத்தே அவரை உதைத்து கீழே தள்ளியதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்ததையடுத்து அங்கு விரைந்த மீரிகம பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் இராணுவ சிப்பாய் எனவும் மற்றையவர் ரயிலின் உணவுச்சாலையில் பணிபுரிந்தவர் எனவும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழ் தரப்பினரிடையே... 03ஆம் பக்க தொடர்...

தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், போராட்டத்தின் காரணமாக கொண்டுவரப்பட்ட புதிய அரசு என்பது நாட்டு மக்களுக்கும் சரி நாட்டினுடைய அபிவிருத்திக்கும் எவ்வளவு தூரம் பங்காற்றப்பட போகிறது என்பதுதான் தற்போதுள்ள கேள்வி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் தலைதூக்கும்... 03ஆம் பக்க தொடர்...

பெரும்பாலானவர்கள் தடுப்பூசிகள் பெற்றுக் கொண்டவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. பொது இடங்களில் பாதுகாப்பற்ற முறையில் நடமாடுவதன் ஊடாகவே கொவிட் வைரஸ் பரவல் மீண்டும் தலைதூக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக பல்வேறு மருத்துவ நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் இதுவரை 6,64,844 கொவிட் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் 99 வீதமானவர்கள் குணப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுகாதார திணைக்களத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## படிக்கட்டுகளை திருத்த... 03ஆம் பக்க தொடர்...

தொல்லியல் மதிப்புள்ள படிக்கட்டு சேதமடைந்துள்ளதால், புதிதாக சீரமைக்க வேண்டும். இந்தப் படிகள் தொல்லியல் துறை அதிகாரிகளின் மேற்பார்வையில் புனரமைக்கப்படவுள்ளன.

இங்குள்ள தொல்லியல் பெறுமதிமிக்க சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து கணக்கிட முடியாது என அதிகாரிகள் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## இலங்கையர் சிலருக்கு... 03ஆம் பக்க தொடர்...

பணத்தை பெற்றுக்கொண்டு கடவுச்சீட்டு விநியோகம்

இது தொடர்பாக ஏற்கனவே 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு இலங்கை தமிழர்கள், 11 சுற்றுலா முகவர்கள் அடங்குவதாக இந்திய ஊடகங்கள் கூறியுள்ளன.

இந்தியாவில் இருந்து ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முகவர்கள் ஊடாக பணத்தை பெற்றுக்கொண்டு இலங்கையர்களுக்கு இவ்வாறு கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## 33,600 லீற். பெற்றோல்... 03ஆம் பக்க தொடர்...

பொலிஸார் தெரிவித்தனர்.

ஹலுகம மலை பகுதியில் குறித்த பவுஸர் திடீரென பின்னோக்கிச் சென்றதால் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

# களுவாஞ்சிகுடி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய ஆடி அமாவாசை மஹோற்சவம்

வரலாற்று சிறப்புமிக்க களுவாஞ்சிகுடி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய ஆடி அமாவாசை மஹோற்சவத்தை முன்னிட்டு கடந்த 18.07.2022 ஆம் திகதி வாஸ்து சாந்தி கிரியை, கிராமசாந்தி கிரியை, அட்ட திக்கு பாலகர்களுக்குரிய வேள்விகள் மற்றும் மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம் போன்ற கிரியைகள் நடைபெற்று 19.07.2022 ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இவ்விழா 28.07.2022ஆம் திகதி ஆடி அமாவாசைதினத்தன்று இந்து சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

**ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வரலாறு**

களுவாஞ்சிகுடியின் வரலாற்றுக்கு 1107ஆம் ஆண்டு மிக முக்கியமான ஒரு ஆண்டாகும். அக்காலப் பகுதியில் வாழ்ந்து வந்த கவுத்தன் குடி மக்கள் தங்களது குலதெய்வமான ஸ்ரீ வீரபத்திர சுவாமிக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்து வந்த விடயத்தினை பழம்பெரும் கதைகள் சித்தரிக்கின்றன. கரையோரக் கிராமமான களுவாஞ்சிகுடியின் ஊடாக கல்முனையிலிருந்து அதாவது மட்டுநகர் செல்வதற்குரிய காடுகள் நிறைந்த நடைபாதை ஒன்று இருந்தது. அதாவது தற்போது இருக்கும் காபட் பிரதான வீதியே அது. மாணிக்க பிள்ளையார் ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் அக்காலத்தில் ஒருபெரிய வேம்புமரம் இருந்ததாம். அந்த வேம்பு மரத்தடியில் பிள்ளையார் உருவத்தை கொண்ட கல்லினை கண்டெடுத்ததாகவும் இவற்றினை மனதார நினைத்து மனதில் நிறுத்தி மேற்படி குடிமக்கள் பூசித்து வந்ததாகவும் இவர்கள் வாழ்ந்த காலத்தில் மாணிக்கன் செட்டி, மாதவன் செட்டி, சுந்தரம் செட்டிஎன்ற மூன்று அண்ணன் தம்பிமார்கள் கவுத்தன் குடியாருடன் உறவாடி வாழ்ந்து வந்தனர். இவர்களில் மாணிக்கன் செட்டி தெய்வப்பற்று மிகுந்தவனாக திகழ்ந்ததுடன் கவுத்தன் குடியாருடன் சேர்ந்து பிள்ளையாருக்கு கொத்துப் பந்தல் இட்டு வழிபட்டு வந்தனர். இக்கிராமத்தில் உள்ள அனைத்துகுடிகளும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக ஓலைக்கிடுகினால் கோவில் கட்டி வழிபடத் தொடங்கினர். மேலும் பல வருடங்கள் சென்ற பின்பு ஆலய வழிபாட்டு முறைகள் விஸ்தரிக்கப்பட்டன. வரலாற்று புகழ்மிக்க இவ்வாலயம் புதுப்பொலிவு கண்டது அதாவது வழிபாட்டு முறைகள் விதிமுறைகள் தெரிந்த குழுக்கள் குடியினர் தம்பட்டை, கோரக்களப்பு, தம்பிலுவில் இருந்து வரவழைக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மேலும் சிலகாலம் சென்ற பின்னர் களுவாஞ்சிகுடி எல்லா குடிமக்களும் வம்சங்களும் சேர்ந்து 1885 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீற்றால் ஒரு செங்கற் கோவிலை கட்டினார்கள். இதற்கு செங்கற்கள் வெட்டகளிமண் எடுத்த மடுவே எமது ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள 'வாவி' மடுவாகும் இப்படியானஆலயத்தை கட்டி முடித்து 1890ம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்து வழிபட்டனர். இவ்வாண்டை தமிழ் இலக்கியத்தில் க, கூ,ள இவ்வாறு மூலஸ்தான பெரிய நிலையில் மேற்குற்றியில் பொறித்து வைத்து இருந்தனர்.பின்னர் 2004 ஆம் ஆண்டு பத்தாம் மாதம் 28ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதன் பின்னர் ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் எனும் நோக்கில் பாலஸ்தாபனம் செய்து 29.01.2018 ஆம் திகதி கும்பாபிஷேகம் செய்துமக்கள் புதுப் பொலிவு கண்டனர்.

பழமையும் பெருமையும் மிக்க இவ்வாலயத்தில் பல அற்புதங்களும் நிகழ்ந்துள்ளன. மூதாதையர்கள் குறிப்பிட்டுள்ள கர்ணபரம்பரைக் கதைகளும் உண்டு. இவை தவிர தற்காலத்திலும் பல அற்புதங்கள் நடந்துள்ளன. அதாவது வட புறமாக வெளி வீதியில் உள்ள கிணறு திடீரென பொங்கி வழிந்து நீரிசைகள் ஒலியெழுப்பி மக்கள் மனதை பக்தி பரவசத்தில் ஆழ்த்தி இருந்தன.

**மஹோற்சவ சிறப்புகள்**

விக்கினங்கள் தீர்க்கும் விநாயகனுக்கு ஆடி மாத அமாவாசை தினத்தை தீர்த்த உற்சவமாக கொண்டு பத்து தினங்கள் மகோற்சவம் இடம் பெறுகின்றது. மஹோற்சவம் என்பது பெரிய விழா என்று பொருள்படும். நித்தியபூசை, மாச உற்சவம் போன்றவற்றில் இடம்பெறும் குறை குற்றங்களை நிவர்த்தி செய்வதற்காக மஹோற்சவம் நடைபெறுகிறது. இது இறைவனின் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துகின்றது. அமாவாசை என்பது சூரியனும் சந்திரனும் ஒன்று சேருகின்ற நாள் ஆகும். அதில் ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசை தினம் மிகவும் சிறப்புமிக்கதாகும்.

எம்மை விட்டு பிரிந்து இறைபதம் எய்திய பிதிர்களுக்கும் மூதாதையர்களுக்கும் தர்ப்பணம் செய்து தானங்கள் கொடுத்து அவர்களை மகிழ்விப்பதற்குரிய நாளாகும்.

சிறப்பாக தந்தையை இழந்தவர்கள் அவர்களுடைய மூதாதையர்களுக்கு ஆடி அமாவாசை



தினத்தன்று விரதமிருந்து தர்ப்பணம் செய்து தீர்த்தமாடி தங்களால் இயன்ற அளவு தான தர்மங்கள் செய்தல் வேண்டும். இதனால் பிதிர்கள் சந்தோஷமடைந்து எங்களுக்கு எல்லா விதமான செல்வங்களையும் குழந்தை பாக்கியம், தோச நிவர்த்தி, நோய்களற்ற தேக ஆரோக்கியத்தையும் வழங்குவர் என்பது நம்பிக்கை ஆகும்.

மகோற்சவத்தின்போது மூலஸ்தானத்தில் இருந்து அருள்பாலிக்கும் இறைவன் மக்களுக்கு அருகில் வந்து அருள் வழங்குகின்றார். கொடியேற்றத்திருவிழா படைத்தல் தொழிலினைக் குறிக்கின்றது. கொடிமரம் பதி (பரம்பொருள்), கொடிச்சீலை – பசு (ஆன்மா), கயிறு பாசம் (கர்மவினைகள்) ஒரு ஆன்மாவானது தான் செய்த கர்ம வினைகளுக்கு ஏற்ப பிறப்பெடுத்து பல்வேறு வகையான துன்பங்களை அனுபவிக்கின்றது.

ஆன்மா ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப்படுகின்ற பாசத்திலிருந்து விடுபடுகின்றபோது பரம்பொருளின் திருப்பாதத்தை அடையலாம் மல நீக்கம் பெற்ற ஆன்மா இறைவனை அடையும் என தத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

**பஞ்சமுக விநாயகர் அர்ச்சனை**

ஐந்து முகங்களை கொண்ட கணபதி ஹேரம்ப கணபதி என அழைக்கப்படுகின்றது. ஐந்து யானை தலையுடன் பத்து கண்களும் பத்து திருக்கரங்களும் கொண்டு ஒரு நோக்காக பஞ்சமுக விநாயகர் பார்க்கின்றபோது மக்களுக்கு இருக்கின்ற துன்பங்கள் எல்லாம் பறந்தோடி விடுகின்றன. இந்த பஞ்ச முக விநாயகருக்கு திருவிழா காலங்களில் தினமும் பஞ்சமுக அர்ச்சனை இடம் பெறுவது சிறப்பு மிக்கவையாகும். இறைவன் திருவிழா காலங்களின் போது வெளி வீதி உலா வருகின்ற போது இறைவன் இன்னும் மக்களுக்கு அருள் கொடுக்கின்றார். இது காத்தல் தொழிலைக் குறிக்கிறது.

**திருவேட்டை திருவிழா**

சாந்த மூர்த்தியாக இருக்கின்ற இறைவன் மல நாசம் செய்வதற்காக மாணிக்கப்பிள்ளையார் திருவேட்டை ஆடுவதற்காக புறப்படுகின்றார். எங்களிடம் இருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை போன்ற மும்மலங்களால் நாம் தினமும் பல்வேறு வகையான துன்பங்களுக்குள் உழன்று தத்தளிக்கின்றோம். இந்த மலங்களை அழித்து எங்களை நல்லவர்களாக மாற்றுவதற்காகவே இறைவன் திருவேட்டை தினத்தன்று அழித்தல் தொழிலைச் செய்கின்றார்.

**மாங்கனித் திருவிழா**

சிவனிடம் நாரதர் மாங்கனியை கொடுத்து பிள்ளையாருக்கும் முருகனுக்கும் இடையில் போட்டியை ஏற்படுத்தி விநாயகர் வெற்றி பெறுவதும் முருகன் கோபித்து பழனிமலை செல்வதும் பெற்றோர் சாந்தப்படுத்தி திரும்ப அழைத்து வருவதும் போன்ற காட்சிகளை நாடகமாக சித்தரித்துக் காட்டி குடும்ப ஒற்றுமைகள், விட்டுக் கொடுப்புகளோடு வாழ வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றன.

**சமுத்திர தீர்த்தோற்சவம்**

ஆலயத்தில் மக்களுக்கெல்லாம் அருள் பாலித்த விநாயகப் பெருமான் நீர்நிலை இருக்கின்ற உயிரினங்களுக்கும் தனது அருளை வழங்க சமுத்திர தீர்த்த உற்சவம் இடம்பெறுகின்றது. மக்களுக்கும் உயிர்களுக்கும் தனது அருளல் தொழிலைச் செய்வதே தீர்த்தமாகும். இக் காலத்தில் மக்கள் தீர்த்தமாடுதல் சிறப்பாகும்.

**கொடியிறக்கம்**

பத்து நாட்களாக கொடி மரத்தில் அருள் வழங்கிய இறைவன் மல நீக்கம் பெற்ற ஆன்மாவினை தன்னுடன் சேர்த்துக் கொள்வதே கொடி இறக்கம் ஆகும். இதன்போது மறைத்தல் தொழிலை இறைவன் செய்கிறான்.

**சண்டேஸ்வரர் பூசை**

இறைவன்மீது சதா சிந்தனையில் இருப்பவர் சண்டேஸ்வர நாயனார் இறைவனை வணங்கிய பின் இவரை வணங்கினால் தான் அதன் பலன் முழுமையாக எங்களுக்கு கிடைக்கும் அதனால் தான் சண்டேஸ்வரருக்கு உற்சவம் நடைபெறுகின்றது இதனால் பூரண பலன்களை நாம் பெறுகின்றோம்.

**சிவாச்சாரியார் உற்சவம்**

இறைவன் சிவாச்சாரியாரிடத்தில் வந்து உறைகின்றார். அதனால் உற்சவத்தை சிறப்பாக நிறைவேற்றியமைக்கு நன்றி செலுத்தும் முகமாக சிவாச்சாரியார் உற்சவம் நடைபெறுகின்றது.

கலாநிதி, கலைச்சுடர்,சாமஸ்ரீ, கீர்த்திஸ்ரீ, இலக்கிய வித்தகர்
நாராயணபிள்ளை நாகேந்திரன் (JP) ...
ஓய்வு நிலை அதிபர், களுவாஞ்சிகுடி

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### காரைக்கால் அம்மையார்



81

அந்தக்கணத்தே, அக்கடவுளுடைய திருவருளினாலே, மாமிசம் முழுதையும் உதறி, ஏற்புடம்பாக, மண்ணுலகமும், விண்ணுலகமும் வணங்கும் பேய்வடிவமாயினார். அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்.

தேவதுந்துபிகள் ஒலித்தன. அது கண்ட சுற்றத்தார்களெல்லாம் அஞ்சி, அவரை நமஸ்கரித்துக் கொண்டு போய் விட்டார்கள்.

ஈசன் அருளால் பேய் வடிவை பெற்ற புனிதவதியார், ஈசனை நினைத்து ஆலயம் பல சென்று பாடல் பாடி துதித்தார். புனிதவதியார் தமக்குச் சிவபெருமானுடைய திருவருளினாலே கிடைத்த ஞானத்தைக்கொண்டு, அற்புதத்திருவந்தாதியும் திருவிரட்டைமணி மாலையும் பாடி, திருக்கைலாச கிரிக்குப் போகவிரும்பி, மனசிலும் பார்க்க மிகுந்த வேகத்தோடு சென்றார்.

**கயிலாயம் செல்லல்:**


அந்தத்திருக்கைலாசகிரியின் பக்கத்தை அடைந்து, அங்கே காலினால் நடத்தல் தகுதியன்றென்று ஒழிந்து, தலையினாலே கைகள் கொண்டு நடந்துபோய், மலையிலேறினார், ஏறும்பொழுது, உமாதேவியார் அதைக் கண்டு, புனிதவதியாருடைய பக்தியைக் குறித்து உலகமாதாவாகிய உமா தேவியாரே ஆச்சரியம் அடைந்தார். பரமேஸ்வரனை நோக்கி "சுவாமி இந்த கயிலையில் காலினால் நடத்தல் தகுதியன்றென்று ஒழிந்து, தலையினாலே கைகள் கொண்டு நடந்து வரும் இந்த பக்தையின் பக்தியே என்ன என்று சொல்லி அழைப்பது" என்றார் பரமேஸ்வரி அன்னை.

அதை கேட்ட பரமேஸ்வரன் "இங்கே வருகின்றவள் நம்மைத் துதிக்கின்ற புனிதவதியார்.இந்தப் பெருமை பொருந்திய பேய் வடிவத்தையும் இவள் வேண்டிப் பெற்றாள்' என்றார்.

பின் புனிதவதியார் கயிலைமலையினை தலையினாலே கைகள் கொண்டு நடந்து வந்து அடைந்தவுடன் நந்தி தேவர் புனிதவதியாரின் சிவ பக்தி கண்டு வியந்து வணங்கி வரவேற்றார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19185) பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் எதற்கு உண்டு?

**வேப்பிலைக்கும் எலுமிச்சைக்கும் உண்டு.**

(19186) ஆடி வழிபாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவை எவை?

**வேப்பிலை, எலுமிச்சை**

(19187) மழைக்காலத்தின் துவக்கம் எது? **ஆடி**

(19188) பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்க் கிருமிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் எவற்றுக்கு உண்டு?

**வேப்பிலைக்கும் எலுமிச்சைக்கும் உண்டு.**

(19189) இதனால் ஆடி வழிபாடுகளில் எவை இரண்டும் முக்கியத்துவம் பெறும்?

**வேப்பிலை, எலுமிச்சை**

(19190) திருமணமாகாத பெண்கள் ஆடி வெள்ளியில் என்ன செய்ய வேண்டும்?

**குத்துவிளக்கினை அலங்கரித்து தீபம் ஏற்றி, மானசீகமாக அதில் அம்மனை எழுந்தருளச் செய்து, லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் செய்து வழிபடவேண்டும்.**

(19191) அப்படி செய்தால் என்ன நடக்கும்?

**நல்ல கணவன் அமைவார்கள்.**

(19192) ஆடி வெள்ளிக்கிழமைகளில் கன்யா பூஜை, ராகு கால பூஜை, நாக தோஷ பூஜை செய்வதால் என்ன நடக்கும்?

**குடும்பத்தில் சந்தோஷம் பெருகும்.**

(19193) ஆடிப்பூரத்தின் சிறப்பு என்ன?

**அம்மன் அவதரித்த நாள்**

## மட்டக்குளி காளியம்மன் ஆலய ஆடிப்பூர பாற்குட பவனி

கொழும்பு 15, மட்டக்குளி , பர்குசன் வீதி 279ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்தின் ஆடிப்பூர பாற்குட பவனி எதிர்வரும் 2022.08.01ஆம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்பாளுக்கு பாலாபிஷேகம் நடத்தப்படுவது விசேட பூஜையும் நடத்தப்படும். அம்பாள் அவதரித்த இந்த ஆடிப்பூர நன்நாளில் இந்த பாற்குட பவனியிலும் அபிஷேகத்திலும் கலந்து கொண்டு அம்பாளின் அருட்கடாட்சத்தை பெற்றுக் கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் அனைத்து பக்தர்களையும் அழைக்கின்றனர்.

## இளைய தலைமுறையை முன்னுக்கு கொண்டுவரும் முன்னோர் வழிபாடு



ஒவ்வொரு மாதமும் அமாவாசை வந்தாலும் ஆடிமாதம் வரும் அமாவாசை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். ஆடி அமாவாசை அன்று விரதம் இருந்து நம் முன்னோர்களை வழிபாடு செய்தால் வாழ்வில் பல்வேறு சிறப்புகளை பெறலாம். பித்ரு லோகத்தில் இருந்து ஆத்மாக்கள், அதாவது முன்னோர்கள் ஆடி அமாவாசையின் போது பூமிக்கு வருகிறார்கள். இந்தநாளில், முன்னோரை வழிபடவேண்டும். அவர்களின் அருளையும் ஆசியையும் பெறவேண்டும்.

எப்போதும் அமாவாசை முதல்நாள், வீட்டை சுத்தம் செய்யுங்கள். ஒட்டடை முதலானவற்றை அகற்றுங்கள். பூஜையறையில் உள்ள பொருட்களை கழுவி சுத்தம் செய்துவிட்டு விளக்குகளை நன்றாக தேய்த்து வைக்க வேண்டும். அத்துடன், சுவாமி படங்கள், முன்னோர்களின் படங்கள் ஆகியவற்றைத் துடைத்து சுத்தம் செய்து மாட்டுங்கள்.

வீட்டைக் கழுவிவிடுவதோ துடைப்பதோ செய்யுங்கள். மறுநாள், அமாவாசை நாளில் பெண்கள் தலைக்குக் குளிக்க வேண்டும்.ஆறு, குளம் முதலான நீர் நிலைகளுக்குச் சென்று முன்னோர் வழிபாடு செய்யவேண்டும். ஆனால் தற்போது கொரோனா ஊரடங்கு காரணமாக கோவில்கள் மூடப்பட்டுள்ளதால் வீட்டிலேயே எளிய முறையில் வழிபாடு செய்யலாம். அதன்பின்னர் ஏழைகளுக்கு பெரிய அளவில் இல்லாவிட்டாலும், சிலருக்காவது அன்னதானம் வழங்க வேண்டும்.அமாவாசையன்று, வீட்டில் பெண்கள் குளித்து காலை உணவு உண்ணாமல் இறந்த முன்னோர்களுக்குப் பிடித்தமான உணவுகளையும், பதார்த்தங்களையும் தயார் செய்வார்கள். அன்றைய சமையலில் எல்லாவிதமான காய்கறிகளும் இடம் பெறும். விரதம் இருப்பவர்கள், காலையில் எதுவும் சாப்பிடாமல் இருந்து, பின் எத்தனை நபர்களை வணங்க வேண்டுமோ, அத்தனை இலைகள் போட்டு, சமைத்த எல்லா உணவுகளையும், பதார்த்தங்களையும் படைத்து, அகல் விளக்கேற்றி வைத்து, தூப தீபம் காட்டி முன்னோர்களை மனதில் நினைத்து வழிபட வேண்டும்.

பின்னர், வீட்டில் செய்துள்ள சாம்பார், ரசம், காய்கறிகள், கூட்டு, சாதம் முதலானவற்றில் நெய்யும் விட்டு, காகத்துக்கு உணவிடுங்கள்.

முன்னதாக, காகத்துக்கு உணவிடும் இடத்தை தண்ணீர் விட்டு சுத்தப்படுத்திவிட்டு, பிறகு உணவளியுங்கள். காகம் என்பது நம் முன்னோர் அம்சம் என்கிறது சாஸ்திரம். அதனால்தான் அமாவாசை நாளில் முதலில் காகத்திற்கு உணவு அளிக்கப்படுகிறது. காகம் என்பது சனி பகவானின் வாகனம். எனவே காகத்துக்கு உணவிடுவதால், அமாவாசை வழிபாடு பூர்த்தி அடைகிறது.

நம் வழிபாட்டாலும் பூஜைகளாலும் பித்ருக்கள் எனப்படும் முன்னோர்கள் அகம் குளிர்ந்து போகிறார்கள். இதனால் பித்ரு சாபம் உள்ளிட்டவை நீங்கும் என்றும் சனி முதலான கிரக தோஷங்கள் விலகும் என்றும் சொல்கிறார்கள் ஆச்சார்யர்கள். அத்துடன் முன்னோர் வழிபாடு, உங்களை முன்னுக்குக் கொண்டுவரும் என்பது நம்பிக்கை.

## நாதப் பிரம்ம யோகம் - 29



ஒரு பூரணமான யோகிக்கு உடலை ஒரு வீணையாக உருவகப்படுத்த முடியும். சரஸ்வதி தேவியின் கைகளில் இருக்கும் வீணை ஆன்மீக முக்கியத்துவத்தை குறிக்கிறது. இது சரஸ்வதி தேவி பகுத்தறியும் மற்றும் நீதியுள்ள புத்திசாலித்தனத்தின் தெய்வீக சக்தி வீணை போன்ற அமைப்பைக் கொண்ட சூக்ஷ்ம உடல் தோன்றுவதை இது குறிக்கிறது. ஒரு மனிதனின் சூக்ஷ்ம உடலில் உள்ள வீணை, மூலாதார சக்கரத்தில் செயலற்ற நிலையில் இருக்கும் குண்டலினியின் சுருளில் ஒரு முனையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட இடா, பிங்கலா மற்றும் சுசும்னா நாடிகளின் 'தந்திக் கம்பிகளைக் கொண்டுள்ளது. ஆறு சக்கரங்கள் என்பது ஓம்காரம் எனும் நித்திய இசை ஒவ்வொரு ஸ்வரங்களாக பிராணனால் உருவாகும் புள்ளிகள். இதுவே வீணையில் அதிர்வுறும் வெவ்வேறு புள்ளிகள்.

பிராண வித்யாவின் வல்லுநர்கள், மூலதாரா சக்கரத்திலிருந்து (இடுப்பு பகுதியில் உள்ள நரம்புத் தொகுதியான எக்ஸ்ட்ராசென்சரி எனர்ஜி நோட் (ESEN)) லம் என்ற ஒலி உருவாகிறது என்பதைக் கண்டறிந்துள்ளனர். ஸ்வாதிஸ்டான சக்கரத்தில் இருந்து பம் என்ற ஒலி வெளிப்படுகிறது. (ESEN in the Hypognastric Plexus); மணிப்பூரா சக்கரத்தில் இருந்து ரம் (ESEN in the Epigastrium Plexus); அனாஹதா சக்கரத்தில் இருந்து ஸம் (ESEN in the Cardiac Plexus); விசுத்தி சக்கரத்திலிருந்து ஹம் (கரோடிட் பிளெக்ஸஸில் உள்ள ESEN) மற்றும் ஆக்ஞா சக்கரத்திலிருந்து ('மூன்றாவது கண்') ஓம். இந்த ஆறு ஒலிகளும் ஒரு மனிதனின் வாழ்நாள் முழுவதும் நுட்பமான உடலில் தொடர்ந்து உற்பத்தியாகின்றன.

"ச, ரி, க, ம, ப, த, நி" இன் இசைக் குறிப்புகள் இயற்பியல் கருவிகளில் வெவ்வேறு இசை அமைப்புகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

இதேபோல், மேலே குறிப்பிடப்பட்ட ஒலிகளின் கலவையும் ஓம்காரத்தின் நுட்பமான நாதமும் மனித உடலில் இருக்கும் வீணையில் இசைக்கப்படுகிறது. நுட்பமான உடலில் உள்ள அதிர்வுகளால் உருவாகும் ஒலி அலைகள் அபரிமிதமான உள் சக்தியின் ஆதாரமாக அமைகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட மறைந்த ஸ்வரங்களின் வெவ்வேறு கலவைகள் மூளை மற்றும் மனதில் மறைந்து இருந்து அவற்றின் அனைத்து இயற்கை செயல்பாடுகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஒருவரின் உள்ளார்ந்த திறமைகள், விருப்பங்கள், ஆர்வங்கள், உணர்ச்சிகள், நம்பிக்கைகள், உள் ஆசைகள், புத்திசாலித்தனம், கற்பனைகள், நம்பிக்கை போன்ற பண்புகளில் இந்த ஒலிகள் தாக்கம் செலுத்துகிறது.

தெய்வீகமான இசையின் மூலம் ஒருவனுடைய பண்பு, மன ஆற்றல், ஒழுக்கம் செயல் என்பவற்றில் மாற்றத்தைக் கொண்டுவர முடியும். இதனால் வாழ்க்கையின் இலட்சியத்தை உயர்வானதாக மாற்ற முடியும். ஆன்மீக சாதனையில் ஓங்கார ஒலி ஒருவனுடைய பரிணாமத்தை உயர்த்தப் பயன்படுகிறது.

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு

எத்தனை வகை உறுதி உடையவராக இருந்தாலும் செயல் உறுதி இல்லாதவரை உயர்ந்தோர் மதிக்க மாட்டார்.

## ஜனாதிபதியின் நகர்வுகள் ஏற்படுத்தியுள்ள நம்பிக்கை

இலங்கை அண்மைக்கால வரலாற்றில் முன்னொரு போதும் எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடிக்கு தற்போது முகம் கொடுத்திருக்கிறது. அந்நிய செலாவணி பற்றாக்குறையால் தோற்றம் பெற்றுள்ள இந்நெருக்கடி மக்களின் அன்றாட வாழ்வில் தாக்கம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்காகப் பரந்த அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அழுத்தங்களும் மக்களை சிரமங்களுக்கு உள்ளாக்கிய வண்ணமுள்ளன. இந்த நிலையில் இது ஒரு தேசிய நெருக்கடியாகவே பார்க்கப்படுகிறது.

இப்பொருளாதார நெருக்கடிக்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டால் தான் உறுதியான தீர்வைக் காண முடியும் என்ற எதிர்ப்பார்ப்பு பரவலாக நிலவுகிறது. அந்த வகையில் இப்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியதன் அவசியம் மேலெழுந்துள்ளது.

இப்பின்னணியில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவும் நாட்டில் சுபிட்சத்தை ஏற்படுத்துவதற்காகவும் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றுபட்டு செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சூழலில் கடந்த 21 ஆம் திகதி இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க உடனடியாக இடைக்கால அமைச்சரவை ஒன்றை அமைத்ததோடு, மக்களின் வலியுறுத்தல்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார். குறிப்பாக நாட்டில் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தவென அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் அவர் தீர்மானம் எடுத்துள்ளார். கடந்த வெள்ளியன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நாட்டின் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று இருக்கும் சூழலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள அறிக்கையில், 'நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கத் தயார்' என அறிவித்திருக்கின்றார். அத்தோடு ஜனாதிபதிப் பதவிக்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நடந்த தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும, 'நாட்டின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார்' என்றுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகளின் உயர்மட்ட இராஜதந்திரிகள், இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் எதிர்வரும் காலங்களில் ஒன்றிணைந்து செயலாற்றுவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள இச்சூழலில், ஜனாதிபதிப் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றதைத் தொடர்ந்து நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் அவர் முன்னெடுக்கும் நகர்வுகள், அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான தீர்மானம், எதிர்க்கட்சி தலைவரினதும் முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் அறிவிப்பு என்பன மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளன.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி விரைவாகவும் வேகமாகவும் தணித்து கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதுவே மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. இதற்கு ஏற்ப பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்தும் போது எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நாட்கணக்கில், மணித்தியாலயக்கணக்கில் காத்துக் கிடப்பது முடிவுக்கு வந்து விடும். அத்தோடு எரிபொருள் மற்றும் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டுள்ள அனைத்து தொழில்துறைகளும் இயல்பு நிலைக்குத் திரும்பி விடும்.

இந்த நிலையில் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளமை பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் முகம் கொடுத்துள்ள அசௌகரியங்களின் தாக்கங்களையும் அழுத்தங்களையும் அவர் நன்கறிந்தவராவார். அவற்றை அடிப்படையாகக் கொண்டு தான் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு நாட்டில் அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்து வருகிறார்.

ஆகவே பிரிந்து நின்று முன்னெடுக்கும் பாரம்பரிய அரசியல் செயற்பாடுகளில் இருந்து வெளியேறி, நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிறுத்தி புதிய ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அது நாடு விரைவாகவும் வேகமாகவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற வழிவகுக்கும். அதன் ஊடாக நாட்டில் சுபிட்சமும் மறுமலர்ச்சியும் ஏற்படும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# கடலோர பாதுகாப்புப் படைக்கென இணைக்கப்பட்ட மற்றுமொரு கப்பல்

## உத்தியோகபூர்வ நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் பிரதம அதிதியாக பங்கேற்பு

இலங்கை கடலோர பாதுகாப்புப் படைக்கென 'ஜயசாகர' என்ற பெயரில் ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் (OPV) உத்தியோகபூர்வமாக (ஜுலை 23) இணைத்துக் கொள்ளப்பட்டது.

துறைமுக நகரான திருகோணமலையில் 23 ஆம் திகதி காலை நடைபெற்ற இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன பிரதம அதிகாரியாக கலந்து சிறப்பித்தார்.

இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் அனுர ஏகநாயக்க அங்கு வருகை தந்த பிரதம அதிதியான ஜெனரல் கமல் குணரத்னவை வரவேற்றார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவுக்கு கடலோர பாதுகாப்பு படையினரால் விஷேட மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவி திருமதி சித்ராணி குணரத்னவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

பாதுகாப்புச் செயலாளர் அடையாளபூர்வமாக அதிகாரப்பத்திரத்தை கப்பலின் கட்டளை அதிகாரிக்கு கையளித்ததனைத் தொடர்ந்து அதனைப் பெற்றுக் கொண்ட கப்பலின் கட்டளை அதிகாரி சம்பிரதாய மரபுகளுக்கமைய அதனை வாசித்தார்.

ஜெனரல் குணரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன மற்றும் கரையோரப் பாதுகாப்புப்படை பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் அனுர ஏகநாயக்க ஆகியோருடன் கப்பலுக்கு சென்று கப்பலின் சின்னம் மற்றும் பெயர்ப் பலகையை மகா சங்கத்தினர் மற்றும் பிற மத பிரமுகர்களது ஆசீர்வாதத்திற்கு மத்தியில் திறந்து வைத்தார்.

அதன் பின்னர் கப்பலை பார்வையிட்ட ஜெனரல் கமல் குணரத்னவுக்கு, கடலோர பாதுகாப்பு படையின் அதிகாரினால் கப்பலின் வசதிகள் மற்றும் செயற்பாட்டுகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து விஷேட பிரமுகர் புத்தகத்திலும் அவர் கையொப்பமிட்டார்.

இந்நிகழ்வை நினைவுகூரும் வகையில் ரியர் அட்மிரல் ஏக்கநாயக்க, பாதுகாப்புச் செயலாளருக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கி கௌரவித்தார். அதேபோன்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் குணரத்னவும் கரையோரப் பாதுகாப்புப்படையின் பணிப்பாளர் நாயகத்துக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கி வைத்தார்.







39.8 மீற்றர் நீளத்தையும் 07 மீற்றர் அகலத்தையும் கொண்ட இந்தக் கப்பல் 313 தொன் எடையுடையதாகும். இந்தக் கப்பல் 10 அதிகாரிகள் உட்பட 78 பணியாளர்களுடன் 7 நொட் சஞ்சரிப்பு வேகத்தில் 3200 கடல் மைல்கள் பயணிக்க கூடியது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரின் போது முக்கிய பங்காற்றிய இக்கப்பல் இலங்கை கடற்படையினால் இவ்வாண்டு ஜனவரியில் (03) கடலோர பாதுகாப்புப்படையிடம் கையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மரபுகளுக்கமைய, கப்பல்கள் முப்படைகளின் தளபதி நியமிக்கும் அதிகாரி ஒருவரினால் அதிகாரம் பெறும் போது கடற்படை கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படும்.

கடலோர பாதுகாப்பு படையின் தேவைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கப்பட்ட பின்னர் இந்தக் கப்பல் கடலோரக் பாதுகாப்பு படையில் இணைந்து புதிய பரிணாமத்தில் நாட்டுக்கான அதன் சேவையைத் தொடரும்.

மேற்படி நிகழ்விற்கு வருகை தருவதற்கு முன்னர் ஜெனரல் கமல் குணரத்ன, கடற்படைத் தளபதியுடன் கடற்படைத் தளத்திலுள்ள உயிர் நீத்த கடற்படை வீரர்களின் நினைவுச் சின்னத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினார்.

மகா சங்கத்தினர் உட்பட சமயப் பெருமக்கள், கிழக்கு கடற்படைத் தளபதி மற்றும் சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள், தூதரகங்களின் பாதுகாப்பு ஆலோசகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

திருகோணமலையிலிருந்து
ஸாதிக் ஷிஹான்

# மலையக தோட்டத் தொழிலாளர்களின் அழியாத பெருவிருட்சம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

### 84 ஆவது ஆண்டு நிறைவு இன்று

காந்தியின் ஆசீர்வாதமும், நேருவின் எண்ணக் கருவும் கொண்டு ஏற்றி வைத்த அமைப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று 84 வருட நிறைவைக் கொண்டாடுகின்றது. 1939 ஆம் ஆண்டு நேரு இலங்கை வந்தார். அப்போது இலங்கை_ இந்தியன் காங்கிரஸ் உதயமானது. 1950 களில் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் பெற்றது. அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் முன்அனுபவம் இ.தொ.காவை இமயத்தில் ஏற்றி வைத்தது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் உழைக்கும் மக்களின் உதய சூரியனாக திகழ்ந்தார். தனது சாத்வீக வழியை பேரன் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அவர் ஊட்டினார். சௌமியமூர்த்தி தொண்டமான் அமரத்துவம் அடைந்தார். அவருக்கு நிகரான ஒரு தலைமையை தருவதற்கு தயாரானார் அமரர் ஆறுமுகன் தொண்டமான். இன்று அவர் அமரராகிவிட்டார். ஆனால் பலம் மிக்கவராக தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கின்றார் இளையவர் ஜீவன் தொண்டமான். 1939 இல் இலங்கை_ இந்தியன் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. அப்புத்தளை ஸ்ரீ கதிரேசன் கோயிலில் தொழிற்சங்கத்திற்கான முதல் தலைவராக அமரர் பெரிசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார்.

முதல் மாநாடு 1940 இல் கம்பளையில் நடைபெற்றது. வரவேற்புக் குழுத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் மகளிர் பிரிவும், வாலிபர் பிரிவும் ஆரம்பமாகின.



1942 ஆம் ஆண்டில் இலங்கை_ இந்திய காங்கிரஸ் இரண்டாவது மாநாடு நடைபெற்றது. 1945 இல் நாவலப்பிட்டி மாநாடு நடைபெற்றது.1946 ஆம் ஆண்டு முதலாவது தொழிற் சங்க போராட்டம் நடைபெற்றது. 1948 இல் இலங்கை பிரஜாவுரிமை சட்டம் நிறைவேறியது.

1947 சுதந்திர இலங்கையின் முதல் பாராளுமன்றத்தில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் மூலம் மலையகத்திலிருந்து 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

1948 இல் இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தின்படி இந்திய வம்சாவளியினரது (தோட்டத் தொழிலாளர்கள்) பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.

1950 இல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றப்பட்டது. சர்வதேச சுதந்திரத் தொழிற் சம்மேளனம் மற்றும் ஏ.ஆர்.ஓ. ஆகிய சர்வதேச தொழிற் சம்மேளனத்தின் அங்கத்துவம் பெற்றது.

1951 இல் இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் 7 புள்ளி என்றழைக்கப்பட்ட முதல் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தம் பணிநீக்கம் சம்பந்தமான விடயங்களை மாத்திரம் உள்ளடக்கியது.

1964 ஸ்ரீமாசாஸ்திரி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. 1965 இல் இ.தொ.கா. அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இ.தொ.கா. தொழிற்சங்கமாகவும் விளங்குகின்றது.

1967 தொழில் பிணக்கு சட்டத்தின் பிரகாரம் தொழில் ஆணையாளரிடம் முதலாம் கூட்டு ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது.

1973 இல் இ.தொ.கா தலைவர் தொண்டமான் நியமன பாராளுமன்ற உறுப்பினரானார். 1974 இல் ஸ்ரீமா இந்திராகாந்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

1974 இல் வி. அண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார். 1977 பொதுத் தேர்தலில் தொண்டமான் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 1978 இல் அமைச்சர் பதவியேற்று 1999 இல் அவரது மறைவு வரை அமைச்சராகப் பதவி வகித்தார்.

2011 இல் இ.தொ.கா 8 உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பியது. மூன்று தசாப்தங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கையில் மட்டுமல்ல தென் ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற் சங்கமாக விளங்கி வருகின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்கள் தோட்டத்துறையின் எல்லாப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக இருக்கின்றனர். அத்துடன் வாலிப, மாதர் பகுதிகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றன. கல்வி, தொழிற்பயிற்சி கலை, கலாசாரம், இலக்கியம், விளையாட்டுத்துறை, சமூக சீர்திருத்தம் ஆகிய தொழிலாளரின் வாழ்க்கையில் எல்லா அம்சங்களுடனும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் பிணைந்து நிற்கின்றன. இன்று இ.தொ.காவின் 84வது அகவை ஆகும். இலட்சிய பயணம் இனிதாக தொடர நாம் வாழ்த்துகின்றோம்.



தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

# கல்முனை பிரதேச மக்களின் உள்ளங்களை விட்டு நீங்காத மக்கள் சேவகன் ஏ.ஆர். மன்சூர்

### மறைந்து இன்றுடன் ஐந்து வருடங்கள்

கல்முனை பிரதேச மக்கள் சேவகன் முன்னாள் அமைச்சர் கலாநிதி ஏ.ஆர்.மன்சூர் அவர்கள் காலமான தினம் இன்றாகும். அப்துல் றஸாக் தம்பதியருக்கு இளையவராக 1933.05.30 அன்று ஏ.ஆர்.மன்சூர் பிறந்தார்.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் கல்முனை பிரதேசத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவராகவும், முதன் முதலில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவராகவும் 1943 ஆம் ஆண்டு பெருமையை சேர்த்தவர் மன்சூர். மேலதிக கல்வியை காத்தான்குடி முஸ்லிம் கல்லூரியில் 1944 ஆம் ஆண்டு தொடர்ந்தார்.

1945 ஆம் ஆண்டு கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் இணைந்து ஆங்கிலக் கல்வியை கற்கத் தொடங்கினார். 1947 ஆம் ஆண்டு மட்டுநகர் சிவானந்தா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். 1948 தொடக்கம் 1952 வரையான காலப்பகுதியில் மட்டுநகர் அரசினர் கல்லூரியில் இணைந்தார். அக்காலத்தில் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியராக இருந்த புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையிடம் தமிழ் கற்றார்.

1953 தொடக்கம் 1954 வரையான காலப்பகுதியில் கொழும்பு சேன் ஜோசப் கல்லூரியில் சேர்ந்து உயர்தர தராதரப்பத்திர பரீட்சையில் சித்தியடைந்தார்.

1955 தொடக்கம் 1958 வரையான காலப்பகுதியில் கொழும்பு சட்டக்கல்லூரியில் இணைந்து கற்றார். இக்காலப்பகுதியில் கட்டக் கல்லூரியின் தூதுக்குழுக்களில் பங்கு பற்றி பாக்கிஸ்தான் நாடு சென்றார். 1958 காலப்பகுதியில் சட்டக்கல்லூரியில் சித்தி பெற்று உயர்நீதிமன்ற சட்டத்தரணியானார்.

1958 முதல் 1961 வரை பிரபல சட்டத்தரணியான ஜி.ஜி. பொன்னம்பலம் QC , இஸ்ஸதீன் மொஹமட் QC, ஏ.சீ.எம். அமீர் QC, முன்னாள் பிரதம நீதியரசர் என்.டீ.என். சமரக்கோன் ஆகியோருடன் கனிஷ்ட சட்டத்தரணியாக தொழில் புரிந்து வந்தார்.

1958 கல்முனை தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சரும், வன்னிமையுமான கேற் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்களின் மூன்றாவது புதல்வியான ஸொஹறா காரியப்பரை திருமணம் செய்து கொண்டார். 1959ம் ஆண்டு மகள் மின்ஹா மன்சூர் பிறந்தார்.


1964 ஆம் ஆண்டு மன்சூர் கல்முனை பட்டின சபைத் தேர்தலில் போட்டியிட்டார். 1970 இல் கல்முனை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினார். 1977 ஆம் ஆண்டு கல்முனை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு 5547 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, பாராளுமன்றத்தின் கணக்குக்குழு, நெடுஞ்சாலைகள் ஆலோசனைக் குழு, போக்குவரத்துச் சபை ஆலோசனைக்குழு, கைத்தொழில் விஞ்ஞான அபிவிருத்தி ஆலோசனைக் குழு, கல்வி ஆலோசனை குழு, பிரதேச அபிவிருத்தி ஆலோசனைக் குழு என்பனவற்றில் இடம்பெற்றதோடு பேராதனைப் பல்கலைக்கழக செனட் சபை அங்கத்தவராகவும் நியமனம் பெற்றார் . 1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராகவும் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். 1989 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் இடம்பெற்று பாராளுமன்ற உறுப்பினராகவும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முதலாவது முஸ்லிம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும், வர்த்தக, வாணிபத்துறை அமைச்சராகவும் நியமனம் பெற்றார்.

2003 ஆம் ஆண்டு குவைத் நாட்டின் இலங்கைத் தூதுவராகப் பதவி வகித்தார். இக்காலத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு குவைத் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் எட்டு கட்டடங்கள் கிடைத்துள்ளன. ஏ.ஆர். மன்சூருக்கு தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் 10 ஆவது பட்டமளிப்பு விழாவின் போது கடந்த 2016.03.20 ஆம் திகதி கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




கல்முனை பொது நூலகம் மற்றும் ஏனைய நூலக அபிவிருத்திகள் பாடசாலைகளுக்காக பௌதீக வளங்கள், கல்முனை பொதுச்சந்தை, கல்முனை நீதிமன்றக் கட்டடத் தொகுதி, கல்முனை நிருவாகக் கட்டடத் தொகுதி, கல்முனை நீர் வழங்கல் திட்டம், கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை நிர்மாணம் மற்றும் வைத்தியசாலைகள் அபிவிருத்தி, கல்முனை தொலைத் தொடர்பு பரிவர்த்தன நிலையம், இலங்கை மின்சார சபை பொறியியலாளர் காரியாலயம், கல்முனை இலங்கை வங்கி கட்டடம், கல்முனை நகர மண்டபம், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் பஸ் நிலையமும், பஸ் தரிப்பிடமும், வீடமைப்புத் திட்டங்கள் போன்ற பல அபிவிருத்திப் பணிகள் இன்றும் அவரது பணிகளில் காலத்தால் அழியாதவைகளாக காணப்படுகின்றன.

தனது தந்தையின் பணியைத் தொடர்வதில் அன்னாரின் புதல்வியும் சட்டத்தரணியுமான மர்யம் நளீம்டீன் (அவுஸ்திரேலியா முஸ்லிம் கவுன்சிலின் தலைவர்) பெரும் தொண்டாற்றி வருகின்றார். மன்சூர் அவர்கள் மறைந்து இன்றுடன் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகின்றன.



எஸ்.அஷ்ரப்கான்
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

## இ.போ.ச ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

**யாழ்.விசேட நிருபர்**

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலை ஊழியர்கள் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பெறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச பேருந்தின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச சாலை ஊழியர்களினால் தலாதகம பகுதியில் தாக்கப்பட்டனர். தாக்குதல் சம்பவத்தை மிகவும் வன்மையாக கண்டித்தும், தாக்குதலை நடாத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.




# வடமாகாண வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய மருத்துவப் பொருட்கள்

இலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடி பொருளாதார அவசரநிலை மற்றும் சமூகமட்ட நோயாளர் நல அத்தியாவசிய நிலை காரணமாக மருத்துவம் சார்ந்த பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையினரின் அவசர வேண்டுகோளிற்கமைய S.K.நாதன் அறக்கட்டளையின் முழுமையான நிதிப்பங்களிப்பினால் வடமாகாண வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசியமான மருந்து பொருட்கள்



சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜானக ஸ்ரீ சந்திரகுப்தா (S.Janaka Sri Chandraguptha) மற்றும் டொக்டர் அன்வர் ஹம்தானி (Dr.Anvar Hamdani) ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக சுகாதார அமைச்சின் செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 24 மில்லியன் பெறுமதியான ரூபா மருந்து பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

## நல்லூர் காளாஞ்சி வழங்கும் நிகழ்வு



**யாழ்.விசேட நிருபர்**

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவிற்கான கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன், பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாச்சார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

## கொக்குத்தொடுவாய் விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு!

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் வீதியில் நடத்து சென்றவரை பேருந்து மோதி விபத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் கடந்த 23.07.2022 அன்று இடம்பெற்றுள்ளது. இதன்போது படுகாயமடைந்த கொக்குத்தொடுவாய் வடக்கினைச் சேர்ந்த 42 அகவையுடைய குடும்பஸ்தர் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

## தென்மராட்சியில் மேலும் இருவருக்கு கொரோனா

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் இருவர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வெள்ளிக்கிழமை கச்சாய் வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 82வயதான முதியவர் ஒருவரும், சனிக்கிழமை கச்சாய் வீதி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 67வயதான பெண்மணி ஒருவருமே இவ்வாறு புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் நோய் அறிகுறி தென்பட்ட நிலையில் தனியார் வைத்தியசாலையில் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு பின்னர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இம் மாத ஆரம்பத்தில் தென்மராட்சியின் கைதடி மற்றும் அல்லாரைப் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கறுப்பு ஜூலை 39 ஆண்டு நினைவு தினம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்ட தமிழர்களின் 39 ஆண்டு நினைவு தினம் சனிக்கிழமை வடமராட்சி தமிழரசுக்கட்சித் அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



அல்வாய் கிழக்கு இலகடியில் உள்ள அலுவலகத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச சுகிர்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கட்சி உறுப்பினர்களும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் ஆகியோர் எழுந்து நின்று மெழுகுதிரி கொளுத்தி அவற்றை கைகளில் ஏந்தி அஞ்சலி செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து சமகால அரசியல் நிலை தொடர்பாக சுமந்திரன் எம் பி, உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றினார்.

## கேப்பாபிலவு வீடு ஒன்றிற்குள் துப்பாக்கி ரவைகள்

**மாங்குளம் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் இந்திராணி என்பவரின் வீட்டிற்குள் நேற்று காலை சமையல் அறையில் உள்ள பாத்திரம் ஒன்றில் பொலீத்தீன் பொதி ஒன்றுக்குள் துப்பாக்கி ரவைகள் கணப்பட்டுள்ளன.

அனைத்தும் புதிய துப்பாக்கி ரவைகளாக காணப்படுவதுடன் இதனை யார் கொண்டு வந்து வைத்திருப்பார்கள் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பில் அச்சமடைந்த குடும்பத்தினர் முள்ளியவளை பொலிசாருக்கு தகவல் கொடுத்துள்ளார்கள்.

## கிளிநொச்சி விவசாயிகளுக்கு இந்திய யூரியா உரம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**



கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கான ஒரு தொகுதி யூரியா உரம் (24072022) வந்து சேர்ந்துள்ளதுடன் இவற்றை உடனடியாக விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம் ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இரண்டு மெற்றிக் தொன் மாத்திரமே அனுமதிக்கப்பட்ட நிலையில் மாவட்ட அரச அதிபரின் முயற்சியின் பயனாக 222 .65 மெற்றிக் தொன் யூரியா கிடைக்கப்பெற்றுள்ளது.




# அறுபது வயதுக்கு மேற்பட்டோரை வருடாந்த இடமாற்றத்துக்கு உட்படுத்த வேண்டாமென கோரிக்கை

**(ஒலுவில் விஷேட நிருபர்)**

கிழக்கு மாகாணத்தில், மாகாண சபை நிருவாகத்திற்குட்பட்ட அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அறுபது வயதை பூர்த்தி செய்த அரசாங்க உத்தியோகத்தர்களை வருடாந்த இட மாற்றத்துக்கு உட்படுத்த வேண்டாமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பதுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்க உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வுக்கான வயது எல்லை கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் 65 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டு அலுவலகங்களுக்கு அனுப்பியும் வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி அறுபது வயதை பூர்த்தி செய்த அரசாங்க அலுவலர்களை இட மாற்றம் செய்யலாமென சுற்றறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை, மேலும் தற்போது மிக இக்கட்டான காலகட்டத்தில் வாழ்க்கை செலவும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இவ்வாறான இடமாற்றத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பதை நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து செய்ய முடியாதுள்ள நிலையில் அனேகமானவர்கள் நோயாளிகளாக உள்ளதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களை இடமாற்றம் செய்வதை நிறுத்தி, அந்தந்த அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெருக்கடியிலிருந்து மக்களை மீட்கும் பொறுப்புள்ள அரசியல்வாதியாக செயற்பட்டேன்

**(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)**

நாட்டின் தற்போதைய நெருக்கடியை மீட்டெடுக்கக் கூடிய வல்லமை மற்றும் அனுபவம் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளதாக தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ,எல்,எம், அதாஉல்லா தெரிவித்தார்.ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட வாக்களிப்பில், ரணில்விக்ரமசிங் கவை ஆதரித்தமை தொடர்பில் ஊடகங்களு க்கு கருத்து வெளியிடுகையிலே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.இது பற்றித் தெரிவித்த அவர்,

ஜனாதிபதியை பாராளுமன்றம் மூலமாக தெரிவு செய்கின்ற வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்தேன். நீண்ட அனுபவம், அரசியல் முதிர்ச்சி இன்னும் சர்வதேசத்தில் அவருக்குள்ள தொடர்புகளால் ,நாட்டின் நெருக்கடியை தீர்க்கும் இயலுமை அவரிடம் உள்ளது.



இது அரசியல் செய்வதற்கான தருணமில்லை. இதனால் தான்,நெருக்கடியிலிருந்து மக்களை மீட்கும் பொறுப்புள்ள அரசியல்வாதியாக நடந்து கொண்டேன்.

தெளிந்த சிந்தனையுடைய எந்த வாக்காளரும் எடுக்கக்கூடிய தீர்மானத்தையே எமது தேசிய காங்ரஸும் எடுத்தது.அது மிகச் சரியான தீர்மானமாக அமைந்தது. தற்போதைய நெருக்கடி சூழலில் நாட்டை மீட்டு காப்பாற்ற ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவால் முடியும்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வீட்டை அநியாயமாக எரித்தார்கள், ஆனால் நாட்டை நிர்வகிக்கின்ற பொறுப்பை அவருக்கு இறைவன் வழங்கியுள்ளான்.

இம்மகத்தான வாய்ப்பை, ஜனாதிபதி திறம்பட பயன்படுத்துவார் என்பது திண்ணம். அனுபவசாலிகளையும், திறமைசாலிகளையும் அவர்,அரவணைத்து நடப்பார்.

இன்றைய நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் நாட்டை முன்கொண்டு செல்வதானால், அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபடும் பயணமே அவசியம் என்றார்.

## குப்பிவிளக்கு தீ, வீட்டில் பரவி பொருட்கள் சேதம்

**(தோப்பூர் குறூப் நிருபர்)**

தோப்பூர் அல்லை நகர் பிரதேசத்தில் மின்துண்டிக்கப்பட்டிருந்த இரவு வேளையில், குப்பி விளக்கிலிருந்து தீ பரவியதால், வீடு தீப்பிடித்து எரிந்துள்ளது. இச்சம்பவம் சனிக்கிழமை (23) இரவு தோப்பூரில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த குப்பிவிளக்கு, அங்கிருந்த ( பெண்) மனைவியின் ஆடையில் பற்றிக்கொண்டதால் இவ்விபரீதம் ஏற்பட்டது. இதன்போது கட்டில், அலுமாரி மற்றும் ஏனைய பொருட்கள் முழுமையாக எரிந்து நாசமாகின.

பிரதேசவாசிகளின் முழுமையான முயற்சியால் நீண்ட நேரத்திற்கு பின்னர் பரவிய தீ, முழுமையாக அணைக்கப்பட்டது. இத்தீ விபத்தில் வீட்டிலிருந்த எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வாகனங்களின் இலக்க முறைப்படி எரிபொருள் விநியோகம்

**(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)**

நற்பிட்டிமுனை காலித்லங்கா எரிபொருள் நிலையத்தில் வாகனங்களின் இலக்கப்படி நேற்று (24) எரிபொருள் வழங்கப்பட்டது.

எரிபொருள் நிலைய உரிமையாளர் சங்க அமைப்பின் தீர்மானத்திற்கிணங்க இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

புகைப்பத்திரத்திற்கு அமைவாக ஒவ்வொரு வாகனத்திற்கும் உரிய பெற்றோல் வழங்கப்பட்டு வருகின்றன. கல்முனை பிராந்தியத்தின் அதிகமான பெற்றோல் நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படுவதால் மக்களின் இயல்பு வாழ்வு படிப்படியாக திரும்பிக்கொண்டிருக்கிறது.தூரப்பிரதேசங்களிலிருந்தும் மக்கள் கல்முனை மாநகருக்கு வருகை தருகின்றனர்.


## புனர்நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைகள் தளபாடங்கள் கையளிப்பு

**(கிண்ணியா தினகரன் நிருபர்)**

கிண்ணியா நடுஊற்றில் அமைந்துள்ள தி/கிண்ணியா அல்அஹ்லா வித்தியாலய வகுப்பறைகள் புனர்நிர்மாணிக்கப்பட்டு, தளபாடங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நேற்று (24) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தன்னார்வத் தொண்டு நிறுவனமான அல்ஹித்மதுல் உம்மாஹ் பௌண்டேசன் அமைப்பு,வகுப்பறைகளை புனரமைத்ததுடன், உடைந்த தளபாடங்களை திருத்தியும் வழங்கியுள்ளது.

வகுப்பறைகளுக்கான மின் இணைப்புக்களும் இதன்போது பெற்றுக்கொடுக்கப்பட்டன.



பாடசாலை அதிபர் கே.எம்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், துருக்கி நாட்டு தொண்டு நிறுவனத் தூதுவர் முஸ்தபா குரு,அவரின் பாரியார் கயா மற்றும் அல்ஹித்மத்துல் உம்மாஹ் பௌண்டேசனின் தலைவர் முஹம்மட் பாத்திஹ் கஸ்ஸாலி ஆகியோருடன் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் விஷேட இருதய வைத்திய நிபுணர் நியமனம்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இருதய விசேட வைத்திய நிபுணராக டாக்டர் எம். ஏ. நௌஸாத் அலி நியமிக்கப்பட்டுள்ளார். சுகாதார அமைச்சு இதற்கான கடிதத்தை இவருக்கு வழங்கியுள்ளதாக, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம் ஹனிபா தெரிவித்தார்.



தென்கிழக்கு பிராந்திய மக்களிடையே அதிகளவாக காணப்படும் தொற்றா நோய்களுள் இருதய நோய், மாரடைப்பு மற்றும் உயர் குருதியமுக்கம் என்பன காணப்படுகின்றன. இதனால் திடீர் மாரடைப்புகளால் இளவயது மரணங்கள் தினமும் நிகழ்கின்றன. இதற்கு, முறையான சிகிச்சைகளை உடனடியாகவும் உயர்தரத்திலும் வழங்க இருதய விஷேட வைத்திய நிபுணர் நௌஸாத் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.

இது,கிழக்குப் பிராந்திய மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# சுகாதார அமைச்சு

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை – சீதுவ

## கருமத்திற்கேற்ற தொழில்நுட்ப அலுவலகரின் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையின் கட்டிட சிறு பராமரிப்புக்கள் புதுப்பித்தல்கள் மற்றும் ஒப்பந்த வேலைகளிற்காக கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூரணப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் (தொழில்நுட்பச் சேவை அலுவலர்கள்) இடமிருந்து பின்வரும் கொடுப்பனவுகளின் அடிப்படையில் தகைமையுள்ள விண்ணப்பதாரரொருவரை தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில் விபரம்:**

மேற்படி புதுப்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தத்திற்கான மதிப்பீடு/மதிப்பீட்டுத் தயாரிப்பு கருமங்களை மேற்பார்வை செய்தல், புதுப்பித்தல்களின் பின்னர் கொடுப்பனவுகளிற்கான பில்களின் பரிந்துறைகளை மேற்கொள்ளல்

**தகைமைகள்:**

I. NDT தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா அல்லது HND உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா அல்லது NCT தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ்
II. குறைந்தபட்சம் 10 வருட சேவை அனுபவம்
III. 60 வயதிற்குக்குறைந்த விண்ணப்பதாரர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும் 60 வருடத்திற்குக் குறைந்த தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் 60 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
IV. ஓய்வு பெற்ற அலுவலர்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம்

**கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை:**

ஒப்பந்த வேலைகள் முடிவற்றதன் பின்னர் இறுதிக் கொடுப்பனவுப் பட்டியலின் 3% வழங்கப்படும். இக் கொடுப்பனவு தவிர வேறு எந்தவித இலாபம் அல்லது உரிமைகள் பெறுவதற்கு உரிமை கிடையாது.

**குறிப்பு:**

இது வைத்தியசாலையின் நிரந்தரப்பதவியல்ல என்றபடியால் நிரந்தர ஊழியர்களிற்கான எந்த விதமான சலுகைகளும் கிடைக்காது.

விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியைக் குறிப்பிட்டு 2022.08.15 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'தலைவர், விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவ என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**

# கொழும்பு மாநகர சபை

## கொள்வனவு அறிவித்தல்

தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்கள்/விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் சேவைகள்/வேலைகளை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

| தொடர் இல. | கேள்வி இலக்கம் | விளக்கம் | கேள்விதாரர்கள் / விலை மனுதாரர்களின் தகுதித்தன்மை | கேள்வி / விலைமனுக் கோரல் ஆவணத்தின் மீளளிக்கப் படாத கட்டணம் | விலைமனு பிணையம் / உத்தரவாத பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1. | CPD16/ 1629/2022 | ஒரு வருட கால எல்லைக்கு கொழும்பு மாநகர சபையின் வருமானம் போன்றவற்றை அதிகரிப்பதற்காக வருமான சேகரிப்பை வலுப்படுத்துவதற்காக உள்ளூராட்சி நிதியிடல் முகாமைத்துவ உசாத்துணையாளரை தெரிவு செய்வதற்கான முன்மொழிவு/ விலைமனு/ கேள்வி. | வியாபார பதிவுடன் இவ்வகையான வழங்கல்கள்/ சேவைகளில் அனுபவமுடைய வழங்குநர்கள் / சேவை வழங்குநர்கள் | 2.240 ரூபா | 50,000 ரூபாவிற்கான நிபந்தனையற்ற உத்தரவாதம் |

கேள்வி ஆவணம் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) ஆகியவற்றை இரு முறைமைகளினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**முறைமை - 01 கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தல்.**

i. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை பின்வரும் முறைமைகளில் செலுத்தலாம்.
   அ) 167-1-001-6-3169425 என்ற கணக்கிலக்கத்தை கொண்டுள்ள மக்கள் வங்கி நகரமண்டப கிளையில் வரவு வைக்குமாறு எந்த மக்கள் வங்கி கிளையிலிருந்தும் அனுப்புதல்.
   ஆ) வாரநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப.3 மணி வரையும் பின்வரும் கொழும்பு நகர எல்லைக்குளுள்ள மாநகர இடப்பரப்புக்களிலுள்ள பணக்கொடுப்பனவு கருமபீடங்கள்.
   - மாவட்ட அலுவலகம் 4
     இல. 147,ஹைலெவல் வீதி
     கிருளப்பொன
     கொழும்பு-06.
   - வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,
     மாளிகாகந்த, கொழும்பு-10.

ii. மூலப்பிரதி பற்றுச்சீட்டு/ வரவுத் துண்டு ஆகியவற்றை கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைப்பது கட்டாயமானதாகும்.

**முறைமை 02 நகரமண்டப இடப்பரப்பிலிருந்து கையேற்றல்**

அ) 2022.08.15 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை ஒவ்வொரு விலைமனுவிற்கும் / விலைமனுக்கோரலுக்கும் நகர மண்டப இடப்பரப்பிலுள்ள சிறாப்பர்களின் கருமபீடங்களில் செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகை திணைக்களத்தின் அலுவலகத்திலிருந்து கேள்வி /விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ) விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2022 ஒகஸ்ட் 15 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்குப் பின்னர் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படமாட்டாது/ வழங்கப்படமாட்டாது.

இ) விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு நிபந்தனையற்ற உடனடியாக பெறக்கூடிய விலைமனு உத்தரவாதம்.∵விலைமனுப்பிணையானது செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனு உத்தரவாதம்/விலைமனுப்பிணை ஆகியன 2022.11.15 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். முன்வைப்பானது 2022.08.16 ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

ஈ. கேள்வி/விலைமனு ஆகியன மூலப்பிரதியானது உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டு நகல்பிரதியுடன் 2022 ஒகஸ்ட் 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07,மாநகரமண்டபம், மாநகர சபை செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

உ. கேள்வி/ விலைமனுவானது 2022 ஒகஸ்ட் 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படுவதுடன் மூடும் நேரத்திற்குப் பின்னர் பெறப்படும் கேள்விகள் /விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள்/விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். இந்தநாள் பொதுவிடுமுறையாக பிரகடனப்படுத்தப்படின், கேள்விகள் / விலைமனுக்கள் அடுத்த வேலை நாளன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படும். கேள்விதாரர்கள் /விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் திறத்தலின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள். தெளிவுறுத்தல்களை பெறுகைக்கான பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 0112- 686389, 0112-686369, 0112-662329.

ஊ. கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் கேள்விகள் /பெறுமதி 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமாக இருப்பின், 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்டம் 03 ஆம் இலக்கத்திற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்த பின்னர் பிசிஏ-3 படிவமானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகரஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# இலங்கை பைத்துல்மால் நிதியம்

## 2022 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கீழே குறிப்பிட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்

- **ஸகாத் பெற தகுதியுள்ள வறிய முஸ்லிம் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள்**
- **ஓகஸ்ட் 2020 ஆம் ஆண்டிற்கான** ஜீ.சீ.ஈ (உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்று இலங்கை அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில் தற்போது **முதலாம் ஆண்டில் கல்வி கற்பவர்கள்.**

விண்ணப்பப் படிவங்களை 2022 ஆகஸ்ட் 25 ஆம் திகதி வரை பைத்துல்மால் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம், அல்லது சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டிய நீண்ட கடித உறையை கடித உறைக்குள் வைத்து அனுப்பி தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம், அல்லது **c.baithulmal@gmail.com** என்ற மின்னஞ்சலினூடாக கோரிக்கை ஒன்றினை இட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2022 செப்டம்பர் 20** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பல்கலைக்கழக புலமைப் பரிசில்"** எனக் குறிப்பிடவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**Ceylon Baithulmal Fund,**
**44A, Haig Road, Bambalapitiya, Colombo - 04**

# அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

உடுப்பத்தாவ புன்னெகபொல, கென்தயாயவத்த இல. 146/70 என்ற விலாசத்தில் வசிக்கும் **பாலசூரிய முதியன்சேலாகே பவிதா ரூபலேகா பாலசூரிய** (தேசிய அடையாள அட்டை இல. 728031425V) ஆகிய நான் எனது அற்றோணி தத்துவப்பத்திரக்காராக உடுபத்தாவ, புன்னெகபொல கென்தயாயவத்த இல. 146/70 என்ற விலாசத்தில் வசிக்கும் **வர்ணகுலசூரிய மகலேகம்பே தம்மிக பெர்னாண்டோ** தேசிய அடையாள அட்டை இல. 713070190V) ஆகிய நபரை நியமித்து பிரசித்த நொத்தாரிஸ் **டப்ளிவ். எஸ். ரொஷான் நிலந்த பேர்னாண்டோ** அவர்களால் எழுதி அத்தாட்சி செய்யப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வடமேல், வடமத்திய கோட்டக்காரியலயத்தில் அற்றோணித்தத்துப்பத்திர புத்தகத்தில் 79ம் பிரிவில் 5849 பக்கத்தில் 3248ம் தின ஏட்டு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம் 7475ம் 2014.10.27 திகதியுமான அற்றோணி தத்துவப்பத்திரம் இத்தாள் மூலம் இரத்துச் செய்து வலுவிழக்க செய்வதாகவும் இதன் பின் மேலே கூறப்பட்ட வர்ணகுலசூரிய மகலேகம்கே சம்பிக பெர்னாண்டோ ஆகியவரால் மேலே கூறப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் கீழ் என் பெயரால் அல்லது எனக்காக செய்யப்படும் ஏதாவது கொடுக்கல் வாங்கல்களுக்கு அல்லது செயல்களுக்கு நான் கடமைப்படவில்லை என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

2022.07.18ஆம் திகதி
குருநாகலில்

**பாலசூரிய முதியன்சேலாகே பவிதா**
**ரூபரேகா பாலசூரிய.**


The Housewives' companion
Classifieds on
Daily News


நிதி அமைச்சு

# அபிவிருத்தி லொத்தர் சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுரண்டும் லொத்தர் டிக்கட்டுகளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அச்சிடுதல் மற்றும் வழங்குதல்

**BID No: DLB/PRO/2022/13**

ஒரு வருட காலத்திற்கு அடையாள குறியீட்டை உறுதி செய்யும் தரவுகள் சகிதம் சுரண்டும் கார்ட்கள் / டிக்கட்டுகளை அச்சிடுவதில் இரண்டு வருட காலம் அனுபவமுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து சுரண்டும் லொத்தர் டிக்கட்டுகளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல் என்பவற்றுக்காக அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக பின்வரும் மூலப்பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   அ. பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு வழங்குநர் (51% அல்லது அதற்கு மேற்பட்ட உள்நாட்டு உரிமைத்துவத்துடன்) விலைமனுக்கள் திறக்கப்படும் திகதிக்கு முன் குறைந்தபட்சம் 02 வருட காலம் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   ஆ. வழங்குநர் பின்வருவனவற்றில் ஏதாவதொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
      i. பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம் அல்லது
      ii. பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்
      iii. கூட்டு தொழில்முயற்சியாக விலைக்கோருவதற்கு ஆவர்வமுள்ள எந்தவொரு தரப்பினரும், இலங்கை கம்பனிகள் பதிவுத் திணைக்களத்தின் கீழ் கூறப்பட்ட வியாபாரம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். வழங்குநரின் தகுதியின் கீழ் விலைமனுதாரரின் அனுபவத்தின் அடிப்படையில், முன்னாள் நிறுவனங்கள் / அமைப்புகளின் (கூட்டு தொழில்முயற்சிகளின்) இயைபுடைய துறையின் அனுபவங்கள் தனித்தனியாக கவனத்திற்கொள்ளப்படும்.
      iv. அரசுரிமை நிறுவனங்கள் / கூட்டுத்தாபனங்கள்
   இ. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் விலைமனுதாரர் (3. ஆ. iii இன் பிரகாரம் புதிதாக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருந்தால்) இலங்கைப் அச்சுப் பொறித்தொகுதியொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
   ஈ. பிலிம் பிளேட்கள் தயாரிப்பதைத் தவிர அனைத்து அச்சிடும் வேலைகளும் ஒரே கூரையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் அச்சுப் பொறித்தொகுதி தங்கள் சார்பாக பிலிம் பிளேட்டுகளை உருவாக்கும் தரப்பினருடன் வெளிப்படுத்தாத ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டும் மற்றும் அந்த ஒப்பந்தத்தின் நகல் பிரதியை அபிவிருத்தி லொத்தர் சபைக்கு (DLB) ஒப்படைத்தல் வேண்டும்.
   உ. ஒப்பந்தத்தை நிறைவேற்ற தனது திறனை நிரூபிக்க விலைமனுதாரர் ஆவண சாட்சிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் விலைமனு ஆவணத்தின் ஊ இணைப்பில் தரப்பட்டுள்ள வாடிக்கையாளர், பணியாளர்கள் இருப்பு, நிதி நிலை மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்களுடன் கடந்த கால அனுபவமும் இருக்க வேண்டும்.
   ஊ. சுரண்டும் கார்டுகள் / டிக்கட்டுகள் மற்றும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தேவைப்பாடுகளைப் பயன்படுத்தி சுரண்டும் கார்டுகளுடன் இணைக்கப்பட்டுள்ள in-line / off-line அச்சிடப்பட்ட லெடெக்ஸ் பூசப்பட்ட மாற்றுத் தரவுகள் இணைக்கப்பட்ட கணனியில் விலைமனுதாரருக்கு குறைந்தபட்சம் இரண்டு வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்.

4. 2022 ஜூலை 25ஆம் திகதியிலிருந்து 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணத்தின் தொகுதியொன்றை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. 2022 ஜூலை 25ஆம் திகதியிலிருந்து 2022 ஆகஸ்ட் 15ஆம் திகதி வரையில் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும் (பொது விடுமுறைகள் தவிர்த்து) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 13,500.00 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், வியாபார தலைப்புக் கடிதத்தில் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-2 என்ற முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

6. விலைமனு ஆவணத்தின் ITB 20.2இல் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறான தொகைகளுக்கான 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றதுமான விலைமனுப்பிணை அல்லது வங்கி உத்தரவாத பாங்கில் பெறப்பட்டதும் கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்று அனைத்து விலைமனுக்களுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. இங்கே குறிப்பாக குறிப்பிட்டுள்ள விலைமனுவிற்காக '1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக' பெறப்பட்ட ஒப்பந்த பதிவு சான்றிதழை அனைத்து விலைமனுதாரர்களும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையில் 2022 ஆகஸ்ட் 05ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

9. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.

10. 2022 ஆகஸ்ட் 16ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை மே/பா., அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "**Bid for the Designing, Developing, Printing and Supplying of Scratch-Off Lottery Tickets to the Development Lotteries Board**" என்ற சொற்கள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் விலைமனுப் பெயர் மற்றும் விலைமனு இலக்கமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

11. அனைத்து விலைமனுக்களும் 2022 ஆகஸ்ட் 16ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் மேலதிகமான அறிவித்தலின்றி திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

12. பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் எந்தவொரு அல்லது அனைத்து முன்வைப்புக்களையும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கும் தேவைப்படின் மேலதிக தகவலை அழைப்பதற்கும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் மேற்கொள்வதற்கான ஏகபோக உரிமையை திணைக்கள பெறுகை குழுவானது தன்னகத்தே கொண்டுள்ளது.

13. மேலே தரப்பட்டுள்ள நேரம், திகதிகள் மற்றும் குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் இதனை பார்வையிடலாம். (www.dlb.lk)

14. மேலதிக விபரங்கள், தேவைப்படின், ITB 07 இல் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைக்கான உதவி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
**www.dlb.lk**
**25.07.2022**


BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
VISIT
apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

SUNDAY OBSERVER Marriage Proposals
The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
for 15 Words - Rs. 1,000/-
Easy way to make your payment :- BOC - Acc.No. 00000377
Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

**விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிட்டம்புவ கொழும்பு வீதி, இல. 586இல் வசிக்கும் **கௌசல்யா கங்கானி சந்ரதிலக்க** (தே.அ.அ.இல. 965581855V) ஆகிய என்னால் வத்துருகம கன்திமஹர, இல. 296/2/B முகவரியில் வசிக்கும் சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு **H.H.D.L. தாஷனி M. யாபா அபேவர்த்தனவினால்** 2021.02.27 திகதியை இல. 165இன் கீழ் எழுதி உறுதிப்படுத்தப்பட்டு நிட்டம்புவ, மடுவேகெதர, இல. 60 முகவரியில் வசிக்கும் திலக்கரத்னலாகே ஆரியமாலா (தே.அ. 43311331V) விற்கு ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட உடன்படாத முறையற்ற விசேட அற்றோணி தத்துவம் 2022.07.25 முதல் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாக இலங்கை குடியரசு மற்றும் சகல மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## அறிவித்தல்

**2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(2) (8)இன் பிரகாரம் கிரிபத்கொட மாகொள வீதி, இலக்கம் 94 உதேசி சிட்டி சொப்பிங் கொம்பிளெக்ஸ் 2ஆம் மாடி (2-2) யில் பதிவு முகவரியைக் கொண்டுள்ள பதிவு இலக்கம் PV8728 உடைய உதேஷி டிரேடர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் ஆனது 2022 ஜூலை 05ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் தனது பெயரை யூட்ரெக்ஸ் குளோபல் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளதென அறிவிக்கப்படுகின்றது.**

**BDO Secretaries (Private) Limited**
**கம்பனி செயலாளர்கள்**

## ஹெல்விடாஸ் இன்டர்கோபரேஷன் ggmbh

இந்நிறுவனமானது 22 மார்ச் 2022 முதல் கீழ்காணும்புதிய முகவரியில் இயங்கும் என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்
தொடர்புகளுக்கு:.

**ஹெல்விடாஸ் இன்டர்கோபரேஷன் ggmbh**
இல. 80, லோரிஸ் ரோட், கொழும்பு - 04.
மின்னஞ்சல்: helvetas.srilanka@helvetas.org
இணையத் தளம்: www.helvetas.org

**அட்டோர்ணி தத்துவத்தை இரத்ததுச் செய்தல்**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசில் மடபாத்த, தம்பே றோட், லேக் வூட் ட்ரைவ், இலக்கம். 116/1B, என்ற விலாசத்தில் வசித்தவரும் தற்போது ஐக்கிய அமெரிக்காவில் ஸீஏ 90808, லோங்பீச், கிரேவூட் அவனியு, 4633 என்ற விலாசத்தில் வசிக்கின்ற 194808010020 எனும் இலங்கை தேசிய அடையாள அட்டையையும் N7321921 எனும் இலக்கத்தையுடைய இலங்கை கடவுச்சீட்டையும் கொண்டவருமான றன்ஜீவ் பிரியன்த குணதிலக ஆகிய என்னால் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை கன்ஸியுளர் நாயகம் எச். எம். பி. ஹேரத் அவர்களினால் 13.01.2021 திகதி உறுதிப்படுத்தப்பட்டு கோட்டே, அதுல்கோட்டே, புதிய ஐயவீர மாவத்த, இலக்கம். 57 1/1 என்ற விலாசத்தில் வசிப்பவரும் 660481745V எனும் இலங்கை தேசிய அடையாள அட்டையை உடையவருமான குருகுலசூரிய அன்தனீ ரோமேஷ் பிரனான்து என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த விஷேட வெளிநாட்டு அட்டோர்ணி தத்துவத்தை செல்லுபடியற்றதாக்கி இரத்துச் செய்வதாக இத்தால் இலங்கை சனநாயக சோஷலிச குடியரச அரசாங்கத்திற்கும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இதன் பிறகு மேலே விபரிக்கப்பட்ட விஷேட வெளிநாட்டு அட்டோர்ணி தத்துவத்தைப் பயன்படுத்தி குருகுலசூரிய அன்தனீ ரோமேஷ் பிரனான்து என்பவரால் செய்யப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்புதாரி அல்ல என்பதையும் இத்தால் வெளிப்படுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

**றன்ஜீவ் பிரியன்த குணதிலக**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## 2022/2023 ஆண்டுகளுக்காக மஹரகம அபெக்ஷா மருத்துவமனையில் அறை வளிச்சீராக்கல் முறைமையின் சரியான பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்கல்

கீழே விபரிக்கப்பட்டவாறு 2022/23 ஆம் ஆண்டுகளுக்காக மஹரகம அபெக்ஷா மருத்துவமனையில் அறை வளிச்சீராக்கல் முறைமையின் சரியான பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மஹரகம, அபெக்ஷா வைத்தியசாலையின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

01. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுதாரர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
02. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அபெக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.
03. 2022.08.15 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் அபெக்ஷா மருத்துவமனையின் பணிப்பாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்படலாம்.
04. விலைமனுக்கள் 49 நாட்கள் காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டுமென்பதுடன் ஆரம்பமாகும் உண்மையான திகதியிலிருந்து ஒப்பந்தக் காலமானது ஒரு வருடமாகும்.
05. விலைமனுக்கள் 2022.08.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் 10,000 ரூபாவிற்கானதும் இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த வங்கியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி கம்பனியிடமிருந்து பெறப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
06. பெறுகை குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
07. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**பணிப்பாளர்,**
**அபெக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**
**தொலைபேசி/ தொலைநகல்: 0112-840233**

# இலங்கை வங்கி

## பின்வரும் இலங்கை வங்கிக் கிளையை மீளமைப்பதற்கு பொருத்தமான கட்டடம் தேவைப்படுகின்றது.

• கிரிமெட்டியான வங்கிக் கிளை

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- உத்தேசக் கட்டடத்தின் முன்பகுதி குறைந்தபட்சம் 25 - 40 அடி அகலம் கொண்டதாக பிரதான பாதைக்கு முகப்பாக நகரத்தின் மத்தியில் குறைந்தது 40 பர்சர்ஸ் பரப்பில் அமைந்திருக்க வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் 2,500 - 3,000 சதுர அடி இட அளவினைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்பு மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- தரைக்கு முழுமையாக தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும் (2'x2').
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 10'x10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்புக் கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரைச் சேமித்து வைக்க 1000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கிரிமெட்டியான இலங்கை வங்கிக் கிளைக்கு பொருத்தமாக கட்டடம்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர்
(வடமேல் மாகாணம்)
இலங்கை வங்கி,
வடமேல் மாகாண அலுவலகம்,
இல: 18, மிஹிந்து மாவத்த, குருணாகலை.
தொலைபேசி : 037 222 3618 / 037 222 2420
தொலைநகல் : 037 222 3619
மின்னஞ்சல் : omnwp@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 யூலை 27ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 85,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122J283 | LKA18223A279 | LKA36423G288 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 37,500 | 25,000 | 25,500 | 85,000 |

ஏல விற்பனைத் திகதி : 2022 யூலை 27
தீர்ப்பனவுத் திகதி : 2022 யூலை 29
வழங்கப்படும் திகதி : 2022 யூலை 29
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2022 யூலை 27, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கைதுறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## TENDER FOR SALE OF 01 NO OF 60 TON CAPACITY FLOATING CRANE GIRAFFE

**கேள்வி இலக்கம்: EW/04/PT/2021/MA/26-1**

1. இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக, திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்கு உரித்தான 01 NO of 60 Ton Capacity Floating Giraffe இன் விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987ஆம் ஆண்டின் 3ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றார்கள். இதற்கமைய அனைத்து தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வி தொடர்பாக ஒப்பந்தக் காலப் பகுதியில் கூறப்பட்ட சட்டத்தைக் கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும். மற்றும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் 550 GRT இற்கும் குறையாத கப்பல்கள் அல்லது இழுவைப் படகுகளை மீள்பாவனைக்கு அல்லது பாவனையிலிருந்து அகற்றுவதற்காக முன் அறிவித்தல் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நிகரான சேவையில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து வருடங்களுக்காவது ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி 45ஆம் இலக்கத்திலுள்ள, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பொறியியல் பிரிவின் (பொறியியல் வேலைகள்) பிரதான பொறியியலாளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். என்பதுடன் பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணமான 4,500.00 (12% பெசேவ அடங்கலாக) ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய பின்னர், வார வேலை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரை, 2022.07.25 முதல் 2022.08.22 வரை, பிரதான பொறியியலாளர் (பொறியியல் வேலைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01 லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதகார சபையின் பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. அனைத்து விலைமனுக்களுடனும் 210,000.00 ரூபாவிற்கான விலைமனுக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். என்பதுடன் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'Sale 01 No of 60 TON CAPACITY FLOATING GIRAFFE, EW/04/PT/2021/MA/26-1' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.08.23ஆம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், பிரதான பொறியியலாளர் (MW) பொறியியல் வேலைப் பிரிவு, இலங்கை துறைமுக அதிகார சபை, 45, லேடன் பஸ்தியன் வீதி. கொழும்பு-01 எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் சமுகத்தில் அதே முகவரியில் திறக்கப்படும்.

**பிரதான பொறியியலாளர் (பொறியியல் வேலைகள்)**
**பொறியியல் வேலைகள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01**
**தொலைபேசி: 011-2482905, 011-24510906**
**தொலைநகல்: 011-2451906**

# இலங்கை வங்கி

## ஏலவிலை கோரல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாட்குறிப்பேடுகளை அச்சிட்டு வழங்க இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அச்சகதாரர்களிடமிருந்து முத்திரையிட்ட விலை கூறல்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திர இல | P/PROC/2022/192 |
| பண்டம் / சேவைகள் விபரம் | இலங்கை வங்கி நாட்குறிப்பேடுகளை (டயரிகள்) - 2023 அச்சிட்டு வழங்கல்<br>▸ முகாமைத்துவ நாட்குறிப்பேடுகள் - 17,000<br>▸ நடுத்தர நாட்குறிப்பேடுகள் (1) - 85,500<br>▸ நடுத்தர நாட்குறிப்பேடுகள் (11) - 10,000<br>▸ விஷேட (நிறைவேற்று) நாட்குறிப்பேடுகள் - 500 |
| மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூபா. 14,000/= |
| சமர்ப்பிக்கப்படவேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூபா. 700,000/= |
| கேள்விப்பத்திர ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித் திகதியும் நேரமும் | 2022.08.12 1400 மணி வரை |
| கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதியும் நேரமும் | 2022.08.15 1000 மணி வரை |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் நடைபெறும் திகதியும் நேரமும் இடமும் | 2022.08.04 1100 மணிக்கு இலங்கை வங்கி தலைமையகம் 03ம் தளம் |

(ஏலவிலை கூறுபவர் தொற்று நோய்ப் பரவல் காரணமாகக் கூட்டங்களுக்கு வங்கிக்கு நேரடியாகச் சமுகமளிக்க முடியாதவிடத்து இணையவழிக் கூட்டங்களில் அவர்கள் கட்டாயமாகப் பங்குபெற வேண்டும்)

1. **ஏல விலைகூறல் மதிப்பீட்டிற்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு விலைகூறுவோர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**
   i) இலங்கையில் நாட்குறிப்பேடுகளை அச்சிட்டு வழங்குவதில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ii) இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றிற்கு / நிறுவனங்களுக்கு ஒரே தடவையில் குறைந்தபட்சம் 10,000 நாட்குறிப்பேடுகளை வழங்கி இருப்பதுடன் கடந்த 03 வருடங்களுக்குள் இரு வெவ்வேறு வருடங்களில் வருடாந்தம் 40,000 நாட்குறிப்பேடுகளை வழங்கியிருத்தல் வேண்டும்
2. விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா.14,000/- (ரூபா.12,500/- + ரூபா.1,500/- VAT) மாத்திரம் செலுத்தி எவையேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1400 மணிவரை இலங்கை வங்கி 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவில் கொள்வனவு செய்யலாம்.
3. பூரணப்படுத்தப்பட்ட விலைகூறல் ஆவணங்களுடன் (இலங்கை வங்கி தவிர்ந்த) இலங்கை வங்கியால் ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றொரு உரிமம் பெற்ற வங்கியிடமிருந்து மேற்குறிப்பிட்டவாறு இவ்விலை கூறலுக்குப் பொருத்தமான தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்டதும் 2022.08.15 தொடக்கம் 2022.12.12 வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதம் / விலைகூறல் பிணை ஒன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். வங்கி உத்தரவாதத்திற்குப் பதிலாக பண வைப்புகள் / வங்கிக் கொடுப்பனவுக் கட்டளைகள் / வங்கிக் காசோலைகள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும்
4. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. ஏல விலை கூறல்கள் 2022.08.15ஆம் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் விலை கூறல்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
6. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
7. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2204260, 2204270

உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## மருத்துவ உபகரணங்கள் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

1. கோரப்படும் உருப்படிகளுக்கான இணக்கமான துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப் பாகங்களுக்கான தகைமையும் தகுதியும் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இந்த ஒப்பந்தங்களின் தொழில்தருநர்கள் சார்பாக கொழும்பு 10 டி சேரம் பிளேஸ். 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | உருப்படி | எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) (மில்லியனில்) |
|---|---|---|---|
| 01 | ETCO2 SENSORS FOR PATIENT MONITORS | 120 | 12 |
| 02 | SPO2 SENSORS FOR PATIENT MONITORS | 4000 | 24 |
| 03 | NIBP CUFFS FOR PATIENT MONITORS | 4000 | 6 |
| 04 | INFRARED LAMP BULBS | 250 | 3 |
| 05 | THERMAL PRINTERS | 24 | 4 |

2. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
3. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலை மனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும்.
4. கொழும்பு 10, டி சேரம் பிளேஸ் 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக திறக்கப்படும்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு விலைமனுவும் இ. ரூ. 5 மில்லியனுக்கு மேற்பட்ட கேள்வித் தொகையை கொண்டிருத்தல் வேண்டும். 1987ஆம் ஆண்டின் பொது ஒப்பந்த இல. 03இன் பந்தி 8இன் கீழ் கம்பனிகள் பதிவாளரால் வழங்கப்படும் சான்றிதழை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. மேற்படி ஒவ்வொரு உருப்படிக்கும் ரூ. 500.00 ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியதன் அடிப்படையில் மற்றும் 2022.07.25 முதல் 2022.08.15 வரை பகிரங்க வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் அசல் மற்றும் நகல்களாக இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். பொதியிடப்பட்ட கடித உறைகளில் முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' எனக் குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகள் வெவ்வேறாக உள்ளிடப்படல் வேண்டும். பின்னர் இரண்டு உறைகளும் ஓர் தனி உறையில் உள்ளிடப்படல் வேண்டும். அத்துடன் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிடல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2022 ஓகஸ்ட் 16ம் திகதி 10.00 (மணிக்கு) அல்லது அதற்கு முன்பு கொழும்பு -10 டி சேரம் பிளேஸ், 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு பிராந்திய பெறுகைக் குழு, தலைவருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளிக்கும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டபின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2022 நவம்பர் 14 வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுப்பிணை நிபந்தனையற்றதாக இருப்பதுடன் வங்கிப் பிணை உத்தரவாதம் 2022 டிசம்பர் 12 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. மேலதிக தகவல்களை உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு கணக்காளரிடமிருந்து தொ.பே. இலக்கம் 2684732 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு.**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு -10**

---

සෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாணத்திற்கு 15,000 எண்ணிக்கையான ஆனைக்கொய்யா (Avocado) (வழங்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட மொட்டு மரங்களுடன் (Budwoods) ஒட்டுவதற்கு) வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை ஊவா மாகாணத்திற்கு 15,000 எண்ணிக்கையான ஆனைக்கொய்யா (Avocado) (வழங்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட மொட்டு மரங்களுடன் (Budwoods) ஒட்டுவதற்கு) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. ஊவா மாகாணத்திற்கு 15,000 எண்ணிக்கையான ஆனைக்கொய்யா (Avocado) (வழங்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட மொட்டு மரங்களுடன் (Budwoods) ஒட்டுவதற்கு) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| ஊவா மாகாணத்திற்கு 15,000 எண்ணிக்கையான ஆனைக்கொய்யா (Avocado) (வழங்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட மொட்டு மரங்களுடன் (Budwoods) ஒட்டுவதற்கு) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA-PMU-275852-GO-RFB | 15,000 Nos | 75,000.00 | 2,500.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-07-25ஆம் திகதியிலிருந்து 2022-08-15ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
